**தேசிய சேமிப்பு வங்கி - 2023**
------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தேசிய சேமிப்பு வங்கியினதும் (''வங்கி'') மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (''தொகுதி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கி மற்றும் தொகுதியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வங்கி மற்றும் தொகுதியின் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியினதும் தொகுதியினதும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பு தொடர்பில் கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் செயல்பாட்டில் கைமுறை தலையீடு காரணமாக நிதி அறிக்கையின் துல்லியத்திற்கு அதிக இடர் காணப்பட்டது. கிளைகளுக்கும் தலைமை அலுவலகத்திற்கும் தனித்தனியாக இரண்டு முக்கிய பரீட்சை மீதி (TB) தயாரிக்கப்பட்டு வருகின்றன. அனைத்து கிளைகளின் பரீட்சை மீதிகளும் CBOS அமைப்பிலிருந்து சுருக்கப்பட்டு, அதை MS Excel spread sheet வடிவத்திற்கு மாற்றி, கிளைகளுக்கு ஒரே பரீட்சை மீதியை உருவாக்குகின்றன. தலைமை அலுவலகப் பிரிவுகளின் பரீட்சை மீதித் தொகைகள் தனித்தனியாக எடுத்துக் கொள்ளப்பட்டு, தலைமை அலுவலகத்திற்கு ஒரே TB இணைக்கப்படுகின்றன. இறுதியாக, பரீட்சை மீதி இரண்டையும் பயன்படுத்துவதன் மூலம், நிதி | கலந்துரையாடப்பட்ட வரையறைகளினை நிவரத்தி செய்வதற்கு கோர் பேங்கிங் தீர்வை ஏற்கனவே வங்கி அமுல்படுத்தியுள்ளது. பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் நிதிக்கூற்றுக்களினை உருவாக்குகின்ற தனித்தனியான தாளாண்மை பொதுப் பேரேடு (Enterprise GL) காணப்படுகிறது. | நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் கைமுறை தலையீடுகள் குறைக்கப்பட வேண்டும். |

அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. இது தரவு இழப்பு அல்லது மாற்றியமைத்தலுக்கு வழிவகுக்கும். தரவு துல்லியத்தை உறுதிப்படுத்த நிதி அறிக்கைகளின் முழு தொகுப்பைத் தயாரிக்க வங்கி முழுமையாக தானியங்கி அமைப்பு தீர்வின் அவசியத்தை மதிப்பீடு செய்ய வேண்டும்.

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 31 டிசம்பர் 2023 இல் உள்ளபடியாக வங்கியின் உள்ளக கிளைகளுக்கு இடையிலான மீதி ரூபா 269.328 மில்லியன் ஆகவும், அதற்கு முந்தைய ஆண்டில் இது ரூபா 103.260 மில்லியன் தொகையாக இருந்தது. கிளை பேரேடு மற்றும் தலைமை அலுவலக பேரேடு கணக்குகளின் பல எண்களை சேகரிப்பதன் மூலம் உள்ளக கிளை மீதி பெறப்பட்டுள்ளது. இந்த மீதிகளின் சிலவை பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே உறைந்த நிலுவைகள் இருந்தன. இருப்பினும், இந்த கிளைகளுக்கு இடையிலான கணக்கு மீதிகளினை சரிசெய்ய வங்கியால் எந்த நடைமுறையும் முறைப்படுத்தப்படவில்லை என்பதுடன் அதற்கு பதிலாக முழுவதுமான ரூபா 269.328 மில்லியனுக்காக முழுமையான ஏற்பாடு ஒதுக்கிடப்பட்டுள்ளது. | கிளைகளுக்கிடையிலான நிலுவைகளை இணக்கம் செய்வதற்கு பின்வரும் நடைமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br><br>கையேடு HO எங்களின் கணக்கு<br>நிலுவையினை தீர்ப்பதற்கான கண்காணிக்க மாதாந்த அடிப்படையில் கிளைகளால் இணக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.<br><br>தானியங்கி தலைமை அலுவல எங்களின் கணக்குகள்<br>மாதாந்த அடிப்படையில் கிளைகளுக்கு இடையேயான நிலுவைகளின் ஒப்பீடு தயாரிக்கப்படுவதுடன், சீரமைக்கும் கணக்குகள் உட்பட தீர்ப்பனவிற்கான நிலுவைகளை கண்காணிக்க வழக்கமான கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. | கிளைகளுக்கிடையிலான நிலுவைகளை இணக்கப்படுத்துவதற்கு போதுமான மற்றும் அளவுடைய நடைமுறைகள் கையாளப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| அ) | 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் 47 ஆம் பிரிவு | உரிமை கோரப்படாத வைப்பு ஒதுக்கக் கணக்கின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு வங்கியினால் செலுத்தப்படும் கொடுப்பனவுகள் பொது திறைசேரியின் திரட்டு | பொது திறைசேரிக்கு காலாண்டு கோரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. 2023 யூலை மாதத்தில் நிலுவையாக இருந்த தொகையிலிருந்து | வங்கி என்.எஸ்.பி சட்டத்தின் தேவைப்பாட்டுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்திலிருந்து மீளச் செலுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டு வரை வாடிக்கையாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா 834 மில்லியன் கணக்காய்வு திகதியான 2023 மே 31 ஆம் திகதி வரையிலும் மீளச் செலுத்தப்படவில்லை. | ரூபா 750 மில்லியனை வங்கி பெற்றது. | |
| (ஆ) 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைக்கு அமைவாக இணக்கத் தேவைப்பாடுகள். | | | |
| (i) 3 (2) (iv) ஆம் பிரிவு | சபை குறைந்தபட்சம் மூன்று சுயாதீன நிர்வாகமற்ற இயக்குனரகள் அல்லது மொத்த இயக்குனர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதியினர் என்பவற்றில் அதிகமாக இருப்பதை சபை கொண்டிருக்க வேண்டுமாயினும் 2023 ஆம் ஆண்டின் போது சபைக்காக இரண்டு சுயாதீன நிர்வாக இயக்குனர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டதுடன் ஏனைய சகல ஐந்து இயக்குனர்களும் சுயாதீனமற்ற மற்றும் நிர்வாகமற்ற இயக்குனர்களாக பதவிக்கமர்த்தப்பட்டனர். | குறிப்பிடப்பட்ட தேவைப்பாடு தொடர்பாக நியமன அதிகாரிக்கு பின்வரும் திகதியிடப்பட்ட கடிதத்தின் ஊடாக தெரிவிக்கப்பட்டுள்ளது:<br>2023.01.31<br>2023.04.12<br>2023.07.21<br>2023.11.07<br><br>அதன்படி 2024.02.21 இல் இவை பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையின் பொருத்தமான பிரிவுகளுடன் வங்கி இணங்க வேண்டும். |
| (ii) 3.2 (i) மற்றும் 3.2 (ix) ஆம் பிரிவு | 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் 8 (1) (அ) பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் நியமனங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சின் அமைச்சரினால் மேற்கொள்ளப்படுகின்றன. எவ்வாறாயினும், 2023 ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான நான்கு மாத | கூறப்பட்ட தேவைப்பாடு தொடர்பாக நியமன அதிகாரிக்கு பின்வரும் திகதியிடப்பட்ட கடிதத்தின் ஊடாக தெரிவிக்கப்பட்டுள்ளது:<br>2023.01.31<br>2023.04.12<br>2023.07.21<br>2023.11.07 | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையின் பொருத்தமான பிரிவுகளுடன் வங்கி இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காலத்திற்கு பணிப்பாளர் சபையை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. வங்கியின் அனைத்து செயற்பாடுகளும் மேற்குறிப்பிட்ட நான்கு மாத காலப்பகுதியில் பணிப்பாளர் சபை இல்லாத நிலையில் மேற்கொள்ளப்பட்டு 2023 மே மாதத்தில் புதிய நியமனங்கள் இடம்பெற்றன.<br><br>2023 ஜனவரி தொடக்கம் ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில் வங்கியால் பணிப்பாளர்களின் குறைந்தபட்ச தேவைகளை பூர்த்தி செய்ய முடியவில்லை, எனவே கூட்டுத்தாபன ஆளுகை வழிகாட்டலின் பிரிவு 3.2 (i) உடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | 3(6)(ii)(அ) ஆம் பிரிவு | சபை கணக்காய்வுக் குழுவின் தலைவர் ஒரு சுயாதீனமான நிர்வாகம் அல்லாத பணிப்பாளராக இருக்க வேண்டும் என்ற போதிலும், சபை கணக்காய்வுக் குழுவின் வங்கியின் கணக்காய்வுக் குழுவின் தலைவராக இருப்பவர் தேசிய சேமிப்பு வங்கி துணை நிறுவனத்தின் தலைவர் பதவியை வகிப்பதன் காரணமாக சுயாதீனமற்ற பணிப்பாளராக இருந்தார். | 2024 பெப்ரவரி வரை நான்கு உறுப்பினர்களினை மாத்திரமே சபை கூட்டமைவு கொண்டிருந்தது. இந்த நான்கு நபர்களுக்கிடையே பட்டயக்கணக்காளர் ஒருவர் மாத்திரேமே காணப்பட்டதுடன், 2023.05.23 இல் சபை கணக்காய்வு குழுவின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். வெற்றிடங்கள் நிரப்பப்படும் வரை ஏனைய சகல குழுக்களுக்கும் மற்றும் இரு துணை நிறுவனங்களுக்கும் மூன்று பணிப்பாளர்களைக் கொண்டு சபை நிர்வகித்தது. அதே சமயத்தில், 2023.06.15 இல் நிதி | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையின் பொருத்தமான பிரிவுகளுடன் வங்கி இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அமைச்சின் மூலம் ஒரு துணை நிறுவனத்தின் பணிப்பாளராக திரு. துஷ்யந்த பஸ்நாயக்க என்பவர் நியமிக்கப்பட்டு, அதற்கேற்ப பொருத்தப்பாடு மற்றும் தகுதி என்பவை இலங்கை மத்திய வங்கியில் இருந்து பெறப்பட்டது. சபைக்கு வேறு தெரிவுகள் காணப்படவில்லாததால் அதே நபரினை சபை கணக்காய்வு குழுவின் தலைவராக வைக்கப்பட்டது. நாங்கள் இந்த நிலைமையினை இலங்கை மத்திய வங்கியிடம் அறிவித்தோம். எனினும், 2024.02.21 இல் ஒரு பட்டையக் கணக்காளரான திரு. அஷேன ஜயசேகர என்பவர் நியமிக்கப்பட்டதனை தொடர்ந்து உடனடியாக தேவைப்பாடு தீர்க்கப்பட்டுள்ளது. | |
| (iv) (3)(6)(iv)(ஊ) ஆம் பிரிவு | முன்மொழிவுக் குழு ஒரு சுயாதீன இயக்குநரால் தலைமை தாங்கப்படுவதோடு, பெரும்பான்மையான சுயாதீன இயக்குநர்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டுமாயினும், முன்மொழிவு குழுவின் பெரும்பான்மையினர் சுயாதீனமற்ற இயக்குநர்களைக் கொண்டிருந்தனர் என்று அவதானிக்கப்பட்டது. | ஐந்து இயக்குனர்களில் தற்போது எங்களிடம் மூன்று சுயாதீன இயக்குனர்கள் மாத்திரமே உள்ளனர். சபை உப குழுக்களினை மீளமைப்பதற்கு எஞ்சிய இரு உறுப்பினர்களினை நியமிப்பதற்காக வங்கி எதிர்பார்த்து வருகிறது. காலத்துக்குக் காலம் இயக்குனர் சபைக்காக முன்மொழிவினை நாங்கள் பெறுகின்ற போதிலும் இலங்கை மத்திய வங்கியினால் பெரும்பான்மை அங்கீகரிக்கப்படவில்லை | 2007 இன் 12 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையின் பொருத்தமான பிரிவுகளுடன் வங்கி இணங்க வேண்டும். |

<table>
<tr>
<td>(இ)</td>
<td>2016 ஜனவரி 29 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கை</td>
<td>கூட்டு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாட்டின் பிரகாரம் 2023 ஜனவரி தொடக்கம் சம்பந்தப்பட்ட ஊழியரின் சம்பளத்திலிருந்து கழிப்பதற்கு பதிலாக இதன் சொந்த நிதிகளிலிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரியாக (PAYE) அல்லது முற்பண ஊழியர் வருமான வரியாக (APIT ) வங்கி செலுத்தியுள்ளது.
<table>
<tr><th>மதிப்பீட்டு ஆண்டு</th><th>தொகை (ரூபா. மில்லியன் )</th></tr>
<tr><td>2016/2017</td><td>155.15</td></tr>
<tr><td>2017/2018</td><td>157.11</td></tr>
<tr><td>2018/2019</td><td>125.75</td></tr>
<tr><td>2019/2020</td><td>146.8</td></tr>
<tr><td>2020/2021</td><td>11.8</td></tr>
<tr><td>2021/2022</td><td>30.44</td></tr>
<tr><td>2022/2023 (2023 ஜனவரி வரை)</td><td>42.99</td></tr>
</table>
</td>
<td>.<br>கூட்டு உடன்படிக்கையின் பிரகாரம் வங்கி ஊழியர்களின் ஊதியம் தீர்மானிக்கப்படுகிறது. அதன்படி, முன்னைய மதிப்பீட்டு ஆண்டுகளுக்கான உழைக்கும் போது செலுத்தும் வரியினை வங்கியினால் அதன் சொந்த நிதியில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது. எனினும், 2023.01.01 ஆம் செல்லுபடியான திகதியில் இருந்து நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 01/2023 ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர்களினால் உழைக்கும் போதே செலுத்தும் வரி செலுத்தப்படுகிறது.</td>
<td>அரச தொழில்முயற்சித் திணைக்களத்தினால் (PED) வழங்கப்பட்ட உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு வங்கி இணங்க வேண்டும்.</td>
</tr>
<tr>
<td>(ஈ)</td>
<td>2013 ஆகஸ்ட் 23 இன் 1824/23 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்கள்</td>
<td>2023 ஆம் ஆண்டிற்கான வரி கழிக்கப்பட்ட பின் இலாபத்தில் ஒரு சதவீதம் என்ற பயிர் காப்புறுதி வரியினை விதிக்கப்படவில்லை.</td>
<td>வரிவிதிக்கக்கூடிய நட்டங்கள் ஏற்பட்டதனால் 2023 இல் பயிர் காப்புறுதி வரிக்காக எவ்வித ஏற்பாடுகளினையும் வங்கி மேற்கொள்ளவில்லை.</td>
<td>வரிக்குப் பின் இலாபத்தில் ஒரு சதவீதம் பயிர் காப்புறுதி வரியாக வங்கி விதிக்க வேண்டும்.</td>
</tr>
</table>

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 7,216 மில்லியன் தொகையான இலாபம் இருப்பதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 2,530 மில்லியன் தொகையாக இருந்தது. ஆகையினால், நிதி விளைவுகளில் ரூபா. 4,686 மில்லியன் தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. வருமான வரி செலவினங்கள் ரூபா 4,909 மில்லியனால் குறைவடைந்தமையே அதிகரிப்பிற்கு முக்கியக் காரணமாகும்.

2023 ஆம் ஆண்டின் போது கடன் மற்றும் முற்பணம், கடன் மற்றும் ஏனைய கருவிகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட வட்டி அதிகரித்தமை காரணமாக வங்கியின் மொத்த வட்டி வருமானம்

ரூபா 54,027 மில்லியனால் அல்லது 31 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வைப்பாளர்களிற்கான செலுத்தப்பட்ட வட்டி அதிகரித்தமை காரணமாக மீளாய்வாண்டிற்கான மொத்த வட்டி செலவினங்களும் ரூபா 56,925 மில்லியனால் அல்லது 41 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரஜை விஷேட வட்டி வீத நிலையான வைப்பு திட்டம் தொடர்பில் பெறவேண்டிய வட்டி மானிய நிலுவை மீது பொது திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய வட்டி வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட ரூபா 6,764 தொகையுடைய வட்டியினை 2022 ஆம் ஆண்டிற்கான வங்கியின் மொத்த வட்டி வருமானம் உள்ளடக்குகின்றது. அமைச்சரவையினால் 2022 திசெம்பர் 19 இல் இடம்பெற்ற இதன் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 2023 ஜனவரி 13 இல் பொதுத்திறைசேரியின் பொது தொழில்முயற்சி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்குறிப்பிட்ட ஏற்பாட்டிற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு, அதிகரிப்பு அல்லது குறைவின் சதவீதத்துடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| விபரம் | விலகல் தொகை அதிகரிப்பு/ (குறைவு) (ரூபா. 000) | விலகல் % | வோறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| தேறிய வட்டி வருமானம் | (2,897,733) | (9) | முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது வைப்பாளர்களுக்கான வட்டி வீதம் பிரதானமாக அதிகரித்தமை காரணமாக 31 சதவீதத்தினால் வட்டி வருமானம் அதிகரித்ததை விட 41 சதவீதத்தினால் வட்டிச்செலவு அதிகரித்துள்ளது. |
| தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் | (663,842) | (34) | கடன்கள் மற்றும் அட்டைகள் தொடர்பான சேவைகள் மூலம் உருவான கட்டணம் மற்றும் தரகு வருமானம் குறைவடைந்தமை ஆகும். |
| தேறிய ஏனைய செயல்பாட்டு வருமானம் | (157,384) | (38) | வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீடு இலாபம் ரூபா 107.62 மில்லியனால் குறைவடைந்தமையும் பங்கிலாப வருமானம் ரூபா 71.54 மில்லியனால் குறைவடைந்தமையும் ஆகும் |
| நட்டக்கழிவுக் கட்டணங்கள் | (603,370) | (12) | பிரதானமாக கடன் மற்றும் முற்பணங்களில் ஏற்பட்ட குறைவு காரணமாக கடன் மற்றும் முற்பணங்களிற்கான நட்டக்கழிவு ஏற்பாடு 2 சதவீதத்தினால் அல்லது ரூபா 108 மில்லியனால் குறைவடைந்தமை ஆகும். |
| மொத்த செலவினங்கள் | 52,847,157 | 31 | நட்டக்கழிவுக் கட்டணங்கள், நிதி சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி மற்றும் வருமான வரி செலவினங்கள் முறையே ரூபா 603.37 மில்லியன், ரூபா 2,043 மில்லியன் மற்றும் ரூபா 4,999 மில்லியன் தொகைகளினால் குறைவடைந்தமை ஆகும். |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் குறித்த சில முக்கிய விகிதங்கள் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட துறைவிகிதங்களுடனான ஒப்பீட்டுடன் கீழே தரப்படுகின்றன.

| **விபரம்** | **துறை விகிதம் *** | **வங்கி** | |
|---|---|---|---|
| **இலாப விகிதம்** | | **2023 (%)** | **2022 (%)** |
| உரிமை மீதான திரும்பல் (ஆர்ஓஈ) | 10.6 | 9.36 | 3.40 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) | 1.5 | 0.26 | 0.28 |
| வட்டி எல்லை | 3.6 | 1.79 | 2.03 |
| **சொத்துக்கள் தர விகிதம்** | | | |
| நிலை 3 மொத்தக் கடன்கள் மற்றும் முற்பண விகிதத்திற்கான கடன்கள் | 10.7 | 4.59 | 2.82 |
| **மூலதன போதுமை விகிதங்கள் (CAR)** | | | |
| CAR-மட்டம் I விகிதம் (ஆகக் குறைந்தது 8.5%) | 13.8 | 16.91 | 15.78 |
| மொத்த CAR விகிதம் (ஆகக் குறைந்தது 12.5%) | 16.9 | 19.26 | 18 |
| **திரவ சொத்துக்கள் விகிதம்** | 44.9 | 54.99 | 40.62 |

* இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட தகவல்களிலிருந்து துறை விகிதங்கள் பிரித்தெடுக்கப்பட்டன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டில் வங்கியின் உரிமை மீதான திரும்பல் விகிதம் (ஆர்ஓஈ) மற்றும் சொத்துக்கள் மீதான திரும்பல் விகிதம் (ஆர்ஓஏ) என்பன முறையே 5.96 சதவீதத்தினாலும் மற்றும் 0.02 சதவீதத்தினாலும் குறைந்துள்ளது.

(ii) முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது திரவச் சொத்துக்கள் விகிதம் 14.37 சதவீதத்தினால் குறைந்துள்ளது மற்றும் இது தொழில்துறையில் உள்ள சராசரியான 44.9 சதவீதத்தை விட அதிகமாகும்.

(iii) 31 திசெம்பர் 2023 இல் உள்ளபடியாக வங்கியின் மொத்த மூலதனப் போதுமை விகிதம் 1.28 சதவீதத்தினால் குறைந்துள்ளது. இது குறைந்தபட்ச சட்டப்பூர்வ தேவையான 12.5 சதவீதத்தை விட அதிகமாகும்.

(iv) 2023 ஆம் ஆண்டில் வங்கியின் தேறிய வட்டி எல்லை முன்னையய ஆண்டுடன் ஒப்பிடும்போது 0.24 சதவீதத்தினால் குறைந்துள்ளது. இருப்பினும், மீளாய்வாண்டின் வட்டி எல்லையானது தொழில்துறை வட்டி எல்லையான 3.6 சதவீதத்தை விட குறிப்பிடத்தக்களவு குறைவாக உள்ளது. சந்தை வட்டி வீதங்கள் அதிகரித்தமையினாலும், மற்றும் நிலையான வீதத்தில் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களினை மீளப்பெறுவதற்கும், குறைந்த வட்டி வீதங்களில் மேற்கொள்ளப்பட்ட நீண்டகால திறைசேரி முறி முதலீடுகளில் வைப்புச்செய்யப்பட்ட முதலீட்டினை மீளப்பெறுவதற்கும் கம்பனியின் இயலாமை காரணமாக வட்டி வருமானம் குறைவடைந்தமையினாலும் வட்டி செலவினங்கள் அதிகரித்தமையே குறைந்த வட்டி எல்லைக்கான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 மே 31 இல் உள்ளபடியான 95 எண்ணிக்கையிலான மோசடி நடவடிக்கைகளினால் வங்கிக்கு ஏற்பட்ட மொத்த இழப்பு ரூபா.60.56 மில்லியன் ஆக இருந்ததுடன், 2024 மே 31 இல் உள்ளபடியான 107 எண்ணிக்கையிலான மோசடி நடவடிக்கைகளில் இருந்து உருவான இழப்பு ரூபா. 81.72 மில்லியன் வரை அதிகரித்துள்ளது.<br><br>• ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கும் மேலாக இழப்புக்களுடன் தொடர்புடைய மோசடி நடவடிக்கைகளின் பெறுமதி ரூபா 44.08 மில்லியனாக இருந்தன.<br>• முப்பது (30) எண்ணிக்கையிலான மோசடி வழக்குகள் மூலம் வங்கிக்கு ஏற்பட்ட மொத்த இழப்பு ரூபா 89.88 மில்லியன் ஊழிய உறுப்பினர்களினால் மேற்கொள்ளப்பட்டதாகும். 2024 மே 31 இல் உள்ளபடியான மொத்த நட்டம் ரூபா 81.72 மில்லயனில் நிலுவையாக உள்ள அந்த இழப்புக்களின் மீதி ரூபா 49.53 மில்லியனாக அல்லது 61 சதவீதமாக இருந்தன.<br>• 2021 முதல் 2024 வரையான ஆண்டுகளின் போது நடந்த ஏடிஎம் அடடைகள் தொடர்பான மோசடிகளில் ஐம்பத்து ஐந்து (55) வழக்குகள் உள்ளன. அவற்றில் ரூபா 3.22 மில்லியன் பெறுமதியான 38 எண்ணிக்கையிலான மோசடிகள் கொடுப்பனவு செயலியில் இருந்து திருடப்பட்ட அட்டை தொடர்பான தகவல்களின் ஊடாக நிகழ்நிலை கொள்வனவை செய்வதன் மூலம் மூன்றாம் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டன. கணக்காய்வு திகதியான 2024 மே 31 வரையில் 38 எண்ணிக்கையிலான மோசடி வழக்குகளுக்கு திருட்டு தொடர்பான எந்த காப்பீட்டு கோரிக்கையும் பெறப்படவில்லை. | <u>கருத்துரை தொடர்பாக இந்த அறிக்கையின் *பின்னிணைப்பு I* இனை பாரக்கவும்.</u> | மோசடி நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்கும் அவற்றைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கும் வங்கி கிளை நடவடிக்கைகள் மீது போதுமான உள்ளகக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.<br><br>. |

### 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 13,015,224 அமெரிக்க டொலர் (திருத்தப்பட்ட - வரிகள் அற்றது) மதிப்பீட்டில் 2016 ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட கோர் பேங்கிங் தீர்வுத் திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு 07 வருடங்களுக்கும் | 2024 செப்தெம்பர் 18 இல் கோர் பேங்கிங் தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்தியது.<br><br>வங்கி 2016 ஏப்ரலில் கோர் பேங்கிங் தீர்வுத் திட்டத்தை | திறைசேரி செயற்பாடுகள், அடகு வைத்தல் செயற்பாடுகள் மற்றும் அஞ்சல் வங்கித்தொழில் செயற்பாடுகள் |

மேலாக எடுத்துள்ளதுடன், இதுவரை 5,998,971 அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது. இந்த வகையான உயர் தொழில்நுட்ப பயன்பாட்டை செயல்படுத்த இவ்வளவு நீண்ட காலத்தை செலவிடுவது இறுதியில் இந்த செயலி வழக்கொழிந்து போக வழிவகுக்கும், தொழில்துறையில் உள்ள மற்ற வங்கிகள் தொடர்ந்து சமீபத்திய தொழில் நுட்பங்களை தழுவுகின்றன.

கொள்வனவு செய்வதற்கான கொள்வனவு செயன்முறையை ஆரம்பித்ததுடன், Temenos AG/Temenos Headquarters SAக்கு விலைகோரலினை வழங்குவதற்கான அமைச்சரவையின் ஒப்புதலுடன் 2019 ஏப்ரலில் கொள்முதல் செயல்முறை நிறைவடைந்தது, பெறுகை செயன்முறை இரண்டு பிரதான கட்டங்களினை உள்ளடக்குகின்றன, அதாவது விருப்பத்தினை தெரிவிப்பதற்கான அழைப்பு விடுத்தலும் (EOI) மற்றும் முற்தகைமை மனுதாரர்களிற்கான முன்மொழிவு கோரிக்கையினை வெளியிடுதலும் (RFP) ஆகும். அதன்படி, விருப்பத்தினை தெரிவிப்பதற்கான அழைப்பு விடுப்பும் மற்றும் முன்மொழிவுகளின் மதிப்பீடுகள் பெறப்பட்டு 2017 மார்ச் மாதமளவில் மனுதாரர்களினை தெரிவுசெய்தல் பணி பூர்த்தி செய்யப்பட்டதுடன், முற்தகைமை மனுதாரர்களுக்கு முன்மொழிவு கோரிக்கையினையும் வெளியிட்டது. எவ்வாறாயினும், பெறுகையின் சிக்கல் தன்மை காரணமாக தள விஜயங்களினையும் உள்ளடக்கிய தெரிவு செய்யப்பட்ட மனுதாரர்களினால் சமர்ப்பிக்கபட்ட விலைமனுக்களினை மதிப்பீடு செய்வதற்காக எதிர்பாரக்கப்பட்ட காலத்தை விட இது எடுத்தது.

கோர் பேங்கிங் சிஸ்டம் அமுலாக்கல் கருத்திட்டம் 2019 ஒக்டோபர் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டதுடன், வியாபாரத் தேவைகள் சேகரிப்பு செயலமர்வுகள் நிறைவடைந்ததன் பின்னர், பிரதான அமுலாக்கல் பங்காளியின் ஆலோசகர்கள் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியதுடன், சர்வதேச பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக அவர்களால் 2021 செப்டெம்பர் வரை இலங்கைக்கு திரும்ப முடியவில்லை. மேலும், வங்கியின் தேவைகளுக்கு ஏற்ப கடன் பெறுதல் மற்றும் வேறு சில தொகுதிகளைச் சேர்ப்பது மற்றும் rollout அணுகுமுறையை 5

என்பவற்றினை நியாயமான காலப்பகுதிக்குள் கோர் பேங்கிங் முறைமையுடன் ஒன்றிணைப்பதற்கு ஒவ்வொரு சாத்தியமான முயற்சிகளையும் எடுப்பது அவசியமாகும்.

| | | | |
|---|---|---|---|
| | | கிளைகளில் இருந்து Big Bang அணுகுமுறைக்கு மாற்றுவதால் கூடுதல் நேரம் ஒதுக்கப்பட வேண்டும்.<br><br>மேலும், 2022 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை நாட்டில் அமைதியின்மை சூழ்நிலை காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் மோசமாக பாதிக்கப்பட்டது, ஏனெனில் தளத்தில் பணிபுரியும் ஆலோசகர்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக நாட்டை விட்டு வெளியேறியமையாகும்.<br><br>கொவிட் -19 தொற்றுநோய் மற்றும் பிற மாற்றங்கள் காரணமாக திட்ட காலத்தை ஏற்படும் தாக்கத்தை குறைப்பதை கருத்தில் கொண்டு, திட்ட நடவடிக்கைகள் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்டன.<br><br>வணிகத் தேவைகளை முடிவு செய்யும் போது, அதாவது 2021 ஆம் ஆண்டில் கிடைக்கக்கூடிய கோர் பேங்கிங் தீர்வின் சமீபத்திய பதிப்பை வங்கி அமுல்படுத்தி வருகின்றது. எனவே, கோர் பேங்கிங் முறைமையின் சமீபத்திய செயல்பாடுகள் மற்றும் திறன்கள் வங்கிக்கு கிடைக்கக்கூடியதாக உள்ளன. | |
| (ஆ) | வங்கியின் இடர் முகாமைத்துவ தொழிற்பாடு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (i) இடர் முகாமைத்துவப் பிரிவினால் (RMD) வழங்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் கருத்துக்களை சபையும் உயர் முகாமைத்துவமும் புறக்கணித்த பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. ஆர்.எம்.டி தங்கள் இடர் மதிப்பீட்டு அறிக்கைகள் மூலம் சில பிரதானமான கடன்களுடன் தொடர்புடைய இடர்களினை தெளிவாக | இந்த விடயம் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளதனை நாங்கள் அவதானித்துள்ளோம்.<br>எவ்வாறாயினும், தற்போது சபையும் முகாமைத்துவமும் இடர் பிரிவினால் சமர்ப்பிக்கப்படும் இடர் அறிக்கைகளை எப்போதும் கருத்தில் கொளவதாகவும், இது மதிப்பீடு செய்வதற்கும் ஒரு போதுமான கடன் தீர்மானத்தை எடுப்பதற்கும் மிகவும் முக்கியமானதாகும் என நாங்கள் வலியுறுத்துவதற்கு எழுதுகிறோம். அனைத்து கடன் பத்திரங்களும் | இடர் தன்மையுடைய வாடிக்கையாளர்களுக்கு கடன்களை வழங்குவதற்கு முன்னர் இடர் முகாமைத்துவ பிரிவினால் முன்னிலைப்படுத்தப்பட்ட இடர் தொடர்பான சிபாரிசுகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பில் வங்கி கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட்ட போதிலும், கடன் குழுவும் சபையும் முன்னிலைப்படுத்தப்பட்ட அபாயங்களைக் கருத்தில் கொள்ளாமல் அத்தகைய கடன்களை வழங்க ஒப்புதல் அளித்தன. அந்த கடன்களில் சில 2023 மே 31 இல் உள்ளபடியாக செயல்படாத கடனாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அந்த பிரதான கடன்களில் இரண்டு ஆர்.பி.ஐ பிறைவேட் லிமிட்டட் என்ற பெயருடைய மாலைதீவு கம்பனி (2018 இல் வழங்கிய ரூபா 1,806 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொ. 9 மில்லியன்) மற்றும் டெக்னோ பார்க் டெவெலப்மேன்ட் கம்பனி பிறைவேட் லிமிட்டட் (2021 இல் வழங்கிய ரூபா 750 மில்லியன்) ஆகியவைக்கு வழங்கப்பட்டுள்ளன. 2024 மே 31 இல் உள்ளபடியாக அவ்விரு கடன்களின மொத்த நிலுவை மீதி முறையே ரூபா 3,979 மில்லியன் மற்றும் ரூபா 332 மில்லியன் ஆக இருந்தன. | குறிப்பாக பெரிய பெறுமதிகள் மற்றும் அனைத்து காபரேட் வசதிகளையும் பிரதிபலிக்கும் வகையில் இடர் முகாமைத்துவப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டு கடன் குழுவிற்கு தமது அபிப்பிராயத்தை முன்வைக்கப்படும். கடன் குழு பரிந்துரை மற்றும் இடர் அறிக்கை ஆகிய இரண்டினையும் சபை பத்திரத்தினை சேர்த்து இயக்குநர்கள் குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றன. | |
| (ii) | வங்கியின் இடர் முகாமைத்துவப் பிரிவு 2018 ஆம் ஆண்டு முதல் தெரிவுசெய்யப்பட்ட நட்ட நிகழ்வுகளுக்காக மூலக்காரண பகுப்பாய்வை நடாத்தியதோடு, மீள நிகழ்தகக் கூடிய நிகழ்வுகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினரின் கவனத்தை ஈர்த்துள்ளது. எவ்வாறாயினும், வங்கி ஊழியர்களின் இதேபோன்ற மோசடி நடவடிக்கைகள் தொடர்ந்து அவதானிக்கப்பட்டன. எனவே, ஆர்.எம்.டி | வங்கியின் கே.எம்.பி (KMPs) இனை உள்ளடக்குகின்ற செயற்பாட்டு இடர் முகாமைத்துவ குழுவில் ஒவ்வொரு மாதமும் மூலக்காரண பகுப்பாய்வு கலந்துரையாடப்பட்டது. ஆர்.எம்.டி இனால் பின்பற்றுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் அடுத்த ஓ.ஆர்.எம்.சீ (ORMC) கூட்டத்திற்கு அறிக்கையிடும். சகல சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பதை இந்த செயன்முறை தெளிவாக சித்தரிக்கிறது. | தொடர்ச்சியான மோசடி நடவடிக்கைகளைத் தடுக்க, அறிக்கையிடப்பட்ட சம்பவங்களுக்கு எதிராக வங்கி கடுமையான கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கிய பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரால் கவனம் செலுத்தப்படவில்லை என்று அது வெளிப்படுத்தியது. | | |
| (iii) | முன்னைய கூட்டங்களில் இருந்து உருவான தீர்க்கப்படாத விடயங்கள் தொடர்பில் எடுத்துரைக்கப்பட வேண்டுமாயினும் செயற்பாட்டு இடர் முகாமைத்துவ குழு (ஓ.ஆர்.எம்.சீ) கூட்டத்தில் கையளிக்கப்பட்ட நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்கு பொறிமுறை எதுவும் இருக்கவில்லை. | கீழே வழங்கப்பட்டுள்ளதன் படி வங்கியின் செயற்பாட்டு நட்டங்களினை அறிக்கையிடுவதற்கும் அறவீடு செய்வதற்கும் வங்கியிடம் பொறிமுறை காணப்படுகிறது.<br>1. கைமுறையாக உள்ளக கணக்காய்வு பிரிவும் மற்றும் சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளரினால் செயற்பாட்டு நட்ட நிகழ்வு தரவு அறிக்கையிடல் முறைமையும் (ஓ.ஏ.எஸ்.வை.எஸ்) ஊடாக நிர்வாக பிரிவிற்கு நட்டங்களினை அறிக்கையிடல்.<br>2. நிர்வாக பிரிவினால் காப்புறுதி சேவை வழங்குனர்களுக்கு விபரங்களை தெரிவித்தல்.<br>3. உரிமைக்கோரிக்கை இலக்கத்தை வழங்குவதன் மூலம் காப்புறுதி சேவை வழங்குனர்கள் உரிமைக்கோரிக்கை அறிவிப்பை உறுதிப்படுத்துகின்றனர்.<br>4. விசாரணையை முடித்த பிறகு உரிமைக்கோரிக்கை தொடர்பான ஆவணங்கள் கணக்காய்வு அறிக்கையுடன் காப்புறுதி சேவை வழங்குனருக்கு அனுப்பப்படும். (மோசடிகளுக்காக மட்டும்)<br>5. இழப்பு சரிசெய்தல் மூலம் உரிமைக்கோரிக்கை மதிப்பீடு (மோசடிகள், அடகு, சொத்து சேதம்) செய்த பிறகு பெறவேண்டிய உரிமைக்கோரிக்கையின் பகுதி காசோலை மூலம் தீர்க்கப்படுவதோடு, மற்றும் நிலையான சொத்து சேதங்களின் இழிவுப் உருப்படி | கையளிக்கப்பட்ட நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு வங்கி பொறிமுறையை அறிமுகம் செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சேவை வழங்குனருக்கு கையளிக்கப்படும்.<br>6. அனுப்பப்பட்ட தகவலுட்ன சேர்த்து உரிமைக்கோரிக்கை காசோலை நிதிப்பிரிவிற்கு அனுப்பப்படும்.<br><br>பெருநிறுவன முகாமைத்துவ குழுவிற்கு அவைகள் தீர்க்கப்படும் வரை தீர்க்கப்படாத விடயங்களினை அறிக்கையிடுவதற்கும் மற்றும் தீர்வு வரும் வரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றதை மீளாய்வு செய்வதற்கும் பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்படும். | |
| (iv) இடர் மற்றும் கட்டுப்பாட்டு மதிப்பீடுகள் (ஆர்சீஎஸ்ஏ) வங்கியின் பிரதான செயல்முறையில் உள்ள கட்டுப்பாட்டு குறைபாடுகளை இனங்கண்டு, மேம்படுத்தலுக்கான மீட்பு நடவடிக்கைகளினை வழங்கினாலும் கொள்முதல், கொடுப்பனவு மற்றும் ஐ.பி.யூ செயற்பாடுகளுக்கான ஆர்.சீ.எஸ்.ஏ நடத்தப்படவில்லை. | இடர் முகாமைத்துவ பிரிவு (ஆர்.எம்.டி) ஆர்.சீ.எஸ்.ஏ விற்கான தீவிர பரப்புக்கு முன்னுரிமை அளித்தது. திறைசேரி பின் அலுவலக செயற்பாடுகள் மற்றும் ஐ.பி.யூ எஞ்சியுள்ள ஐ.பி.யூ தொழிற்பாட்டுக்கான திறைசேரி - ஆர்.சீ.ஏ அல்லது ஆர்.சீ.எஸ்.ஏ என்பதனுள் அடங்கும். கொள்முதல் மற்றும் கொடுப்பனவு வருடத்திற்குள் நடத்தப்படும். | வங்கியின் குறிப்பிடத்தக்க செயன்முறைக்காக இடர் மற்றும் கட்டுப்பாட்டு மதிப்பீடுகள் நடத்தப்பட வேண்டும். |
| (v) இடர் முகாமைத்துவ பிரிவின் தலைவர் ஒரு பெருநிறுவன முகாமைத்துவ பதவியல்ல என்பதோடு இது வங்கியினுள் இடர் முகாமைத்துவ தொழிற்பாட்டின் சுயாதீனத்தினை பாதித்துள்ளது என்று அவதானிக்கப்பட்டது. | இது மீண்டும் மீண்டும் ஏற்பட்ட விடயம் என்று நாங்கள் புரிந்துகொள்கிறோம்.<br>எவ்வாறாயினும், பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.<br>2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வங்கிச் சட்ட நிர்ணயத்தின் 2.1 (xix) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவன கட்டமைப்பில் பிரதான நிறைவேற்று அதிகாரியின் மட்டத்திற்கு கீழே உள்ள உடனடி இரு அடுக்குகளில் உள்ள அதிகாரிகள் அதாவது அலுவலகர்கள் செயல்திறன் நிர்வாக தொழிற்பாடுகள் அல்லது கே.எம்.பி என உதவி பொது முகாமையாளர் மட்டம் தீர்மானிக்கப்படுகிறது. அதன்படி, இடர் முகாமைத்துவ பிரிவின் தலைவர் ஏ.ஜீ.எம் தரத்தில் உள்ள வங்கியின் முக்கிய முகாமைத்துவ | இடர் முகாமைத்துவப் பிரிவு அதன் செயற்பாடுகளின் பயனுறுதி மற்றும் சுதந்திரமான தொழிற்பாட்டிற்காக பெருநிறுவன முகாமைத்துவம் சார்ந்த நபரால் வழிநடத்துவது பொருத்தமானதாகும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஊழியர் ஆவார். இவர் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவிற்கு (பி.ஐ.ஆர்.எம்.சீ) நேரடியாக அறிக்கை செய்வார்.<br>எனவே, இடர் முகாமைத்துவ பிரிவின் தலைவரானவர் வங்கியில் சுயாதீனமான முக்கிய முகாமைத்துவ பதிவியை வகிக்கிறார்.<br>சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவிலும் (பி.ஐ.ஆர்.எம்.சீ) மற்றும் சபையிலும் இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது. எனினும், தேவை ஏற்படின் ஏ.ஜி.எம் பதவியில் உள்ள வங்கி சீ.ஆர்.ஓ இன் தற்போதைய நிறுவன கட்டமைப்பு எதிர்காலத்தில் மேம்படுத்தப்படும் என இயக்குனர் சபையின் கருதுகிறது.<br>மேலும், தற்போது பெருநிறுவன முகாமைத்துவம் மற்றும் நிறைவேற்று முகாமைத்துவம் என்ற இரு முக்கிய மட்டங்களினை வங்கியின் முகாமைத்துவ கட்டமைப்பு உள்ளடக்குகிறது. பெருநிறுவன முகாமைத்துவம் பிரதி பொது முகாமையாளர்களினை (டி.ஜி.எம்) உள்ளடக்குகின்ற அதே வேளை நிறைவேற்று முகாமைத்துவம் உதவி பொது முகாமையாளர்களினை (ஏ.ஜீ.எம்) உள்ளடக்குகின்றது.<br>பெருநிறுவன முகாமைத்துவ பிரிவில் உதவி பொது முகாமையாளர்களினை உள்ளடக்க பரிந்துரைக்கும் சபை பத்திரத்தினை சமர்ப்பிக்க நாங்கள் முன்மொழிகிறோம். | |
| (இ) | அனுராதபுரம், எல்பிட்டிய, கல்னேவ, கதிர்காமம், கிரிந்திவெல, மொனராகலை, இரத்தினபுரி மற்றும் கெக்கிராவ ஆகிய இடங்களில் அமைந்துள்ள காணிகளின் 1973 முதல் 1996 வரையான காலப்பகுதியின் போது நிர்மாண நடவடிக்கைகளுக்காக வங்கி ரூபா. 83.6 மில்லியன் செலவிட்டிருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை அந்த | அனுராதபுரம் : 2024.09.12 இல் சட்டப்பிரிவு பணியாளர்கள் அனுராதபுர பிரதேச செயலகத்திற்கு விஜயம் செய்து, தொடர்புடைய ஆவணங்கிளினை சேகரித்து, நில ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு அவைகளை சமர்ப்பித்துள்ளனர். தற்போது வரை இவ்விடயம் நில ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தில் நிலுவையாக | மேற்குறிப்பிட்ட நிலங்களினை நியாயமான காலப்பகுதிக்குள் வங்கி குத்தகைக்கு எடுக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| காணிகளின் சட்டபூர்வ உரிமை பெறப்படவில்லை. | உள்ளது. | |
| | எல்பிடிய : பிரதேச செயலகத்திடம் இருந்து அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. நில ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தில் ஆவணம் தயாரிக்கபட்டு வருகிறது. | |
| | கல்னேவ : நாங்கள் குத்தகை உடன்படிக்கைக்காக மகாவலி அதிகார சபையிடம் கோரிக்கையிட்டுள்ளோம் அல்லது ஞாபகமூட்டியுள்ளோம். | |
| | கதிர்காம விருந்தினர் தங்குமிட மாளிகை : பூர்த்தி செய்யப்பட்ட குத்தகை உடன்படிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. | |
| | கெகிராவ : தேசிய சேமிப்பு வங்கி முகாமைத்துவம் குத்தகை உடன்படிக்கையினை கையெழுத்திட்டு நில ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளது. நாங்கள் முழுவதும் பூர்த்திசெய்யப்பட்ட உடன்படிக்கையினை பெறுவதற்கு எதிர்பார்க்கிறோம். | |
| | கிரிதிவெல : ஜனாதிபதி செயலகத்தில் குத்தகை உடன்படிககை நிலுவையில் உள்ளது. | |
| | மொனராகல : தேசிய சேமிப்பு வங்கி குத்தகை உடன்படிக்கையினை கையெழுத்திட்டு நில ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளது. நாங்கள் முழுவதும் பூர்த்திசெய்யப்பட்ட உடன்படிக்கையினை பெறுவதற்கு எதிர்பார்க்கிறோம். | |
| | இரத்னபுரம் : தேசிய சேமிப்பு வங்கியில் குத்தகை | |

| | | |
|---|---|---|
| | உடன்படிக்கையில் கையெழுத்திட நிலுவையில் உள்ளது. | |
| (ஈ) கிளை முகாமையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தலின் பிரகாரம் 30 ஏப்ரல் 2023 இல் உள்ளபடியாக வழங்கப்பட்ட ரூபா 262.295 மில்லியன் தொகையுடைய கடன் தொடர்பான 330 எண்ணிக்யையிலான கடன் கோப்புகள் காணாமல் போயுள்ளன. 95 தனிநபர் கடன் கோப்புகள், 229 வீட்டுக் கடன் கோப்புகள், 4 சட்டக் கோப்புகள் மற்றும் நிலையான வைப்புகளுக்கு எதிராக வழங்கப்பட்ட 2 கடன் கோப்புகள் ஆகியவை இதில் அடங்கும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் முன்வைக்கப்படுகின்றன. | | |
| (i) இந்த 330 கடன் கோப்புகளில், 29 சதவீதம் அல்லது 96 எண்ணிக்கையிலான கடன் கோப்புகள் செயல்படாத வகையின் கீழுள்ள கடன் தொடர்பானவை. அவற்றில் 43 கோப்புகள் வீட்டுக் கடன்கள் தொடர்பானவை, 81 கோப்புகள் தனிநபர் கடன்கள் தொடர்பானவை ஆகும். 2024 ஏப்ரல் 30 இல் உள்ளவாறான அந்த செயல்படாத கடன்களின் மொத்த நிலுவைத் தொகையானது வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையில் ரூபா 39.699 மில்லியனாக அல்லது 66 சதவீதமாக இருந்தது. | கவனம் செலுத்தப்பட்டதற்கு அமைய இயற்கை பேரழிவு, மோசடி நடவடிக்கை, செயற்பாட்டு பிரச்சினை மற்றும் ஏனைய விடயங்கள் காரணமாக வீட்டுக்கடன் மற்றும் தனிப்பட்ட கடன் கோப்புக்கள் அழிக்கப்பட்டுள்ளன அல்லது தொலைக்கப்பட்டுள்ளன. அதன்விளைவாக, இந்த வகைகளின அடிப்படையில் வங்கி அறவீட்டு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கணினி முறைமையில் கிடைக்கக்கூடிய தகவலினை பயன்படுத்தி இதன் அறவீட்டு முயற்சிகளை வங்கி தொடர்கிறது. | கோப்பு முகாமை மீதான உள்ளக கட்டுப்பாடுகள் ஒவ்வொரு கிளையிலும் வலுப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) தவறவிடப்பட்ட 330 கடன் கோப்புகளில், மொத்தமாக ரூபா 1.434 நிலுவை மீதியுடைய நான்கு எண்ணிக்கையிலான கடன் கோப்புகள் சட்டப்பூர்வ கோப்புகளாகும். இந்த கோப்புகள் தொலைந்தமையினால், கடன் பெற்றவர்கள் மீது | கடன் விண்ணப்பப்படிவ விபரம், கடன் வழங்கிய தகவல் மற்றும் இந்த கடன்களிற்கான மீள்கொடுப்பனவு பதிவுகள் என்பன கணினி முறைமையில் கிடைக்கக்கூடியதாக உள்ளன. தேவை ஏற்படின், கடன் பெற்றவர்களின் நிலுவைப் பொறுப்புக்களினை நிரூபிப்பதற்கும், அவர்களுக்கு எதிராக சட்ட | பிணை தொடர்பான ஆவணங்களின பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பலமான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளினை வங்கி விருத்தி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வங்கியினால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்பதுடன் கடன்களினை அறவீடு செய்த பின்னர் வாடிக்கையாளர்களின் உரிமைப்பத்திரத்னை விடுவிக்க முடியாதுள்ளது. இது நீண்ட கால நோக்கில் வங்கியின் நற்பெயரைக் குலைக்கக்கூடும். | நடவடிக்கைகளினை ஆரம்பிப்பதற்கு அடிப்படையினை வழங்குதவற்கும் இவைகள் போதுமாகும். மேலும், கடன் வழங்கியமைகள், கடந்த மீள்கொடுப்பனவு மற்றும் எதிர்கால மீள்கொடுப்பனவு அட்டவணைகள், கடன்களின் பூரணமாக தீர்ப்பனவு செய்வதனை நிச்சயிப்பதற்கு வங்கியினை அனுமதித்தல் தொடர்பாக கணினி முறைமை பதிவேடுகளினை பதிவு செய்து சேமிக்கின்றது. முழுமையான தீர்ப்பனவு தொடர்பில் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு வங்கி உருவாக்கியுள்ள அதன் உரிமைப்பத்திர விடுவிப்பு நடைமுறை விடுவிப்புகளினை பின்பற்றி உரிமைப்பத்திரங்களினை விடுவிப்பு செய்யும். எனினும், சில சந்தர்ப்பங்களில், மூல உரிமைப்பத்திரம் அழிக்கப்பட்டு அல்லது தொலைக்கப்பட்டு இருந்தால், வாடிக்கையாளரின் ஒப்புதல் மற்றும் உடன்படிக்கையினை பெற்ற பிறகு நிலப் பதிவேடு மற்றும் ஆரம்ப வழக்கறிஞரைக் குறிப்பிடுவதன் மூலம் நகல் உரிமைப்பத்திரத்னை வழங்குவது தவிர்க்க முடியாததாக இருக்கும். | |
| (iii) | தொலைக்கப்பட்ட 330 எண்ணிக்கையிலான கடன் கோப்புகளில் 215 கடன் கோப்புகள் அல்லது 65 சதவீதமானவை கடுவெல கிளையில் வெள்ள நிலைமை காரணமாக காணாமல் போயுள்ளன. இவற்றில், 31 கடன் கோப்புகள் செயல்படாத வகையின் கீழ் உள்ள கடன்கள் தொடர்பானவை. இக்கடன்களின் மொத்த நிலுவைத் தொகை ரூபா 10.282 மில்லியன் ஆகும். | வங்கியின் கடுவெல கிளையில் கோப்புக்கள் அழிவடைந்தகைக்கு அல்லது காணாமல் போனமைக்கு பிரதான காரணம் இயற்கை பேரழிவாக இருந்தது. செயல்படாமையாக மாறியமைக்கு வழிவகுத்த மூலக்காரணங்கினை கண்டறிந்து கடன்களினை அறவீடு செய்ய பொருத்தமான நடவடிக்கைகளை வங்கி எடுத்துள்ளது. தேவை ஏற்படின், கணினி முறைமையில் உள்ள தகவல் மற்றும் தக்கவைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் என்பவற்றினை பயன்படுத்தி சட்ட நடவடிக்கைகளைக் கொண்டு கடன்களினை அறவீடு செய்வதற்கு வங்கி தொடரும். | பிணை தொடர்பான ஆவணங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பலமான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளினை வங்கி விருத்தி செய்ய வேண்டும். |
| (iv) | தலைமை அலுவலகக் கிளையில் தொலைந்த | 16 தனிப்பட்ட கடன்களுடன் தொடர்பில் மோசடியில் ஈடுபட்ட | பாதுகாப்பு ஆவணங்களினை |

| | | | |
|---|---|---|---|
| | கடன் கோப்புகள் 21 ஆகும், அவற்றில் 18 கடன் கோப்புகள் செயல்படாத கடன் வகையின் கீழ் இருப்பதுடன், அவற்றில் 16 கோப்புகள் அந்த கிளையின் ஊழியர் செய்த மோசடி தொடர்பானவை ஆகும். கடன் கோப்புகள் கிடைக்கக்கூடியதாக இன்மையினால் மோசடியில் ஈடுபட்ட ஊழியருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது கேள்விக்குறியாக உள்ளது. | ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடிவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனினும், காபபுறுதி உரிமைக்கோரிக்கை ஊடாக குறிப்பிடப்பட்ட மோசடி நடவடிக்கைகளில் இருந்தான 85 சதவீத நட்டங்கள் ஏற்கனவே அறவிடப்பட்டுள்ளது. மேலதிகமாக, தொலைந்த கோவைகள் தொடர்பான ஏனைய கடன்களின் நிலுவை மீதிகளினை அறவீடு செய்வதற்கு வழமையான அறவீட்டு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றது. | பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பலமான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளினை வங்கி விருத்தி செய்ய வேண்டும். |

## 3.3 செயற்பாட்டுச் வினைத்திறனின்மைகள்

### 3.3.1 கடன் வழங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக வங்கியினால் வழங்கப்பட்ட மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 548,898 மில்லியனாக இருந்தது. அந்த தொகையில், ரூபா 3,800 மில்லியன் (ஐ.அ.டொ. 13.08 மில்லியனுக்கு சமமானவை) அல்லது 0.69 சதவீதமானவை வெளிநாட்டு கம்பனிக்கு வழங்கப்பட்ட கடனையும் மற்றும் அதன்மீது பெறவேண்டிய நிலுவை வட்டியையும் பிரதிபலிக்கின்றது. 2024 மே 31 இல் உள்ளபடியான இந்த வெளிநாட்டு கடனின் பெறவேண்டிய மீதி ரூபா 3,978 மில்லியனாக இருந்தது. | குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு நாணய கடன் தற்போது செயல்படாத கடன் வகையினுள் உள்ளது. மீட்பு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மற்றும் (ஆ) இல் வழங்கப்படுகிறது.<br><br>2023 ஆம் நிதியாண்டின் போது அமெரிக்க டொலர் நிதியிடலுக்கான (ஐ.அ.டொ. 2.5 மில்லியன்) முன்மொழிவினை வங்கி பெற்றது. எனினும், வங்கிக்கு இலாபகரமாக இருக்கின்ற நிதியிடலுக்காக காணப்படும் வட்டி வீதம் மிகக் குறைவாக இருந்தமையினால் வசதி செயல்படவில்லை.<br>ஏற்பாட்டாளர்கள் மற்றும் ஏனைய வங்கிகள் ஊடாக ஐ.அ.டொலரில் கடன் வழங்குவதற்கான அதன் விருப்பத்தினை வங்கி சுட்டிக்காட்டியதுடன், மற்றும் தற்போது சாத்தியமான வாய்ப்புக்கனுக்களினை தேடுகிறது. | கடன் வழங்குவதற்கு முன்னர் வங்கி முறையான வாடிக்கையாளர் மதிப்பீடுகளை செய்து, கடன் நிலுவைத் தொகையை மீளப் பெற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளபடியான பெருநிறுவன கடன்களின் செலுத்தவேண்டிய மொத்த நிலுவை தொகை ரூபா | செயற்பாடற்ற பெருநிறுவன கடன்கள் தொடர்பாக வங்கியனால் மேற்கொள்ளப்பட்ட மீட்பு | கடன் வழங்குவதற்கு முன்னர் வங்கி முறையான வாடிக்கையாளர் |

80,202.94 மில்லியனாக இருந்ததுடன், அதில் ரூபா 5,955.57 மில்லியன் செயற்பாடற்ற கடன் வகையின் கீழ் இருந்தது. இந்த மொத்த நிலுவைத் தொகை 2024 மே மாத இறுதியில் ரூபா 79,941 மில்லியன் வரை குறைக்கப்பட்டுள்ளது.
மேற்குறிப்பிட்ட செயல்பாடற்ற கடன் மீதித் தொகையில், 67 சதவீதம் வெளிநாட்டுக் கடனையும், 29 சதவீதம் திறைசேரி உத்தரவாதத்தால் பாதுகாக்கப்பட்ட அரசு தொடர்பான கம்பனிக்கு வழங்கப்பட்ட கடன்களையும் பிரதிபலிக்கின்றது.

நடவடிக்கைகள்

<u>வெளிநாட்டுக் கடன் (பெருநிறுவன செயற்பாடற்ற கடனின் 67 சதவீதமானவை)</u>

கடனை மீள்கட்டமைப்பதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. கடன் பெற்றவர் கடனை மீள்கட்டமைப்பதற்கு முன்மொழிந்துள்ளார், மற்றும் சம்பந்தப்பட்ட விதிகளும் நிபந்தனைகளும் தேசிய சேமிப்பு வங்கி மற்றும் மக்கள் வங்கி (ஒருங்கிணைப்பு பங்காளர்) என்பவற்றுடன் பகிரப்பட்டுள்ளது.

<u>அரசாங்க உத்தரவாதத்தால் ஆதரிக்கப்பட்ட ரூபாய் கடன்கள்-</u>

திருத்தம் - திறைசேரி உத்தரவாதத்தால் பாதுகாக்கப்பட்ட அரசு தொடர்பான கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட செயற்பாடற்ற கடனில் தற்போது டெக்னோ பார்க் டெவெலப்மென்ட் கம்பனி லிமிட்ட் என்றழைக்கப்படும் ஒரு கடன் மாத்திரமே உள்ளது. பெந்தோட்ட நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கான தேசிய நீவவழங்கல் மற்றும் நீர்ப்பாசன சபையிடம் இருந்து அறிவிட வேண்டிய தவணை நிலுவைகள் 2023 திசெம்பர் மாதத்தில் தீர்க்கப்பட்டுள்ளதுடன் செயற்பாடற்ற கடனினுள் இதன்பின் வசதி காணப்படாது.

டெக்னோ பார்க் டெவெலப்மன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் தொடர்பாக எடுக்கப்பட்ட அறவீட்டு நடவடிக்கைகள்

- டெக்னோ பார்க் டெவெலப்மன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் தலைவருக்கு நிலுவை தொடர்பாக பல ஞாபகமூட்டல்களினை வங்கி அனுப்பியது.

- நிதி அமைச்சிடமிருந்தான விசாரணை தொடர்பாக (வசதியின் பிணையாளியாக

மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும் மற்றும் கடன் நிலுவைத் தொகையை மீளப் பெறுவதற்கும் வங்கியின் செயல்படாக் கடன் நிலுவையைக் குறைப்பதற்கும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

இருக்கின்ற) கம்பனியினை முதலீட்டு மேம்படுத்தல் கீழ் வர்த்தமானியில் வெளியிட்டு உள்ளதாகவும், மற்றும் முன்னைய இயக்குனர்கள் சபை மற்றும் தலைவர் செயற்பாட்டில் இல்லை எனவும் வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

- செயலாளர், நிதி அமைச்சு(MOF), பணிப்பாளர் நாயகம், பொது தொழில்முயற்சி திணைக்களத்தின் 2023.06.21 ஆம் திகதிய கடிதத்தின் மூலமான உத்தரவின் கீழ் பணிப்பாளர் நாயகம், செயற்பாட்டு முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம் (DPMM) மற்றும் செயலாளர், முதலீட்டு மேம்படுத்தல் அமைச்சு ஆகியவற்றுக்கு குறிப்பிடப்பட்டுள்ளதாக வங்கிக்கு அறிவித்தது.

- செயற்பாட்டு முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தை தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் விடயத்தினை கலந்துரையாடுவதற்கு கூட்டமொன்றினை வங்கி கோரியது.

- வங்கி செயற்பாட்டு முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு ஞாபகமூட்டல் கடிதமொன்றினை அனுப்பியதுடன், 2024.03.11 இல் பிரதமரின் செயலாளரின் தலைமையில் கூட்டமொன்று கூட்டப்பட்டது. வெளிநாட்டு கம்பனிக்கு இடைக்கால தலைவர் நியமிக்கப்பட்டுள்ளதாக இந்தக்கூட்டத்தில்

தெரிவிக்கப்பட்டது. மேலும், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைகழகத்துடன் குருநாகல டெக்னோ பார்க்கினை இணைப்பதற்கு முன்மொழிவொன்று அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் செயற்திட்டத்திற்கு நிதியளிப்பதற்கு வெளிநாட்டு முதலீட்டார்களை அழைப்பதற்கும் மேலும் தெரிவிக்கபப்பட்டது.

- வங்கியானது நிலுவைத் தொகையின் நிலையினை அறிவித்து, அதன் அவசர தீர்ப்பனவினை கோரியது. இறுதி தீர்ப்பனவு எட்டப்பட்டு மற்றும் டெக்னோ பார்க் இன் எதிர்காலம் தொடர்பாக திட்டவட்டமான ஏற்பாடு மேற்கொள்ளப்படும் வரையிலும் இடைக்கால நிலுவையினை தீர்ப்பதற்கு நிதி அமைச்சு மற்றும் கம்பனி அலுவலர்கள் என்பவர்களுடன் விடயத்தினை மேலும் கலந்துரையாட தீர்மானிக்கப்பட்டது.

- இயக்குனர் சபையினால் வழங்கப்பட்ட உத்தரவின் பிரகாரம் 2024.07.04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் விடயத்தினை தீர்ப்பனவு செய்வதற்கு தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் [DG-DNB] உதவியை கோரியது. இதற்கான பதிலளிப்பாக, தேவையான நடடிவடிக்கைக்காக பொது தொழில்முயற்சி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதாக 2024.07.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் [DG-DNB] தெரிவித்துள்ளார்.

(இ)

2024 மே 31 ஆம் திகதி வரை வங்கியால் வழங்கப்பட்ட 5 மில்லியனுக்கும் அதிகமான கடன்களின் நிலுவை தொகை ரூபா 24,566 மில்லியன் தொகையாக இருந்தது. அந்த தொகையில் ரூபா 22,835 மில்லியன் அல்லது 93 சதவீதம் கிளைகள் மூலமாகவும், மீதமுள்ள 7 சதவீதம் கடன் பிரிவு மூலமாகவும் வழங்கப்பட்டது.

2024 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதியில் உள்ளபடியான 5 மில்லியனுக்கும் மேலான கடன்களில், கிளைகள் ஊடாகவும் மற்றும் கடன் பிரிவின் ஊடாகவும் முறையே ரூபா 7,864 மில்லியன் மற்றும் 1,380 மில்லியன் என்பன செயல்பாடற்ற கடன் பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

பின்வரும் வாடிக்கையாளர்களுக்கு எதிராக பரேட் சட்டத்தினை () வங்கி ஆரம்பித்ததுடன் 2024.12.15 வரை நிறுத்தல் கட்டளை மூலம் பரேட் சட்டம் மீது அரசாங்கத்தின் இடைநிறுத்தம் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது..

| Loan No. | Amount (Rs.) Mn | Board Approval/ CC approval obtained date |
|---|---|---|
| 603086293217 | 20.00 | 27/03/2024 |
| 603086192076<br>603086223216<br>603086192088 | 43.16 | 22/03/2024 |
| 600020066379 | 16.00 | 20/02/2024 |
| 600670027840 | 20.05 | 22/03/2024 |
| 600630037332 | 6.5 | 22/03/2024 |
| 600240020355 | 17.7 | 22/03/2024 |
| 603086247060 | 12.6 | Auction date: 18/01/2024<br>(Stay Order) |
| 603086271300 | 7.5 | 26/09/2023 |
| 603086199176 | 6.5 | 05/03/2024 |
| 603086198761<br>603086223230 | 13.6 | 22/03/2024 |
| 603086296961<br>603086296973 | 9.7 | 12/02/2024 |
| 603086275201 | 21.37 | 22/02/2024 |
| 603086264063<br>603086264013<br>603086303876 | 41.46 | 27/03/2024 |

கடன் வழங்குவதற்கு முன்னர் வங்கி முறையான வாடிக்கையாளர் மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும் மற்றும் கடன் நிலுவைத் தொகையை மீளப் பெறுவதற்கும் வங்கியின் செயல்படாக் கடன் நிலுவையைக் குறைப்பதற்கும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

(ஈ)

வங்கி 2020 திசெம்பர் 23 ஆம் திகதி ரூபா 164.73 மில்லியன் பெறுமதியில் கூட்டுச் சொத்துக் கடனை வழங்கியுள்ளது. கடனைப் பெற்றவர் இரு தவணைக் கொடுப்பனவினை மாத்திரமே செலுத்தியுள்ளதுடன் 2023 மே 31 இல் உள்ளபடியாக ரூபா 39.363 மதிப்பிடத்தக்க 27 தவணைக் கொடுப்பனவுகள் நிலுவையாக இருந்தன. 2024 பெப்ரவரி 06 இல் உள்ளபடியாக செலுத்த வேண்டிய மொத்தக் கடன் நிலுவையாக ரூபா 222.381 இருந்தது. ஏலம் நடத்தப்பட்ட பிறகு 2024 பெப்ரவரி 06 இல் இந்த ஆதனம் வங்கியிடம்

வீடு மற்றும் ஆதன வகையின் கீழ் இரு நபர்களுக்கு குறிப்பிடப்பட்ட கடன் வழங்கப்பட்டது. கடன் பெற்றவரினால் தொடர்ச்சியான கொடுப்பனவினை செலுத்த முடியாமல் சென்றதுடன் வங்கி கடனை அறவீடு செய்வதற்கு விரைவான மீட்பு நடவடிக்கைகளினை எடுத்தது. ஆதனத்தின் மதிப்பீட்டு விபரங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

| Date | Market Value (Rs.) | FSV (Rs.) | Name of the Valuer |
|---|---|---|---|
| 14/10/2020 | 195,610,000/- | **190,000,000/-*** | Mr. T M B Tennakoon |
| 10/11/2020 | 218,000,000/- | **210,000,000/-*** | Mr. T B Balasuriya |
| 17/12/2022 | 197,800,000/- | **196,500,000/-** | Mrs. I K Rajapaksha |
| 04/07/2024 | 197,400,000/- | **180,000,000/- *** | Mr. U R Silva |

ஆதனத்தின் சந்தை விலையினை

கடன் வழங்குவதற்கு முன்னர் வங்கி முறையான வாடிக்கையாளர் மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும் மற்றும் கடன் நிலுவைத் தொகையை மீளப் பெறுவதற்கும் வங்கியின் செயல்படாக் கடன் நிலுவையைக் குறைப்பதற்கும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள

| | | | |
|---|---|---|---|
| | உரிமையளிக்கப்பட்டது. எனினும், 2024 யூலை 04 ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நிலத்தின் சந்தைப் பெறுமதி ரூபா 197.4 மில்லியனாக இருந்தது. ஆகவே, எஞ்சியுள்ள நிலுவை மீதியான ரூபா 24.981 மில்லியனை அறவிட முடியும் என்பது கேள்விக்குறியாக உள்ளது. | கருத்திற் கொண்டு அப்செட் விலை தீர்மானிக்கப்பட்டது. அப்செட் விலையினை விட அறவிடவேண்டிய தொகை உயர்வாக உள்ள போதிலும் ஏலத்தின் ஊடாக ஆதனத்தினை விற்பனை செய்வதற்கு ரூபா 198 மில்லியன் என்ற அப்செட் விலையினை நிர்ணயிப்பதற்கு இயக்குனர் சபை 2024.01.22 இல் இடம்பெற்ற அதன் கூட்டத்தில் அவர்களின் அங்கீகாரத்தினை வழங்கியது. 2024.02.06 இல் வங்கி ஆதனத்தின் பொது ஏலத்தினை மேற்கொண்டது. எனினும், விருப்பமுள்ள கொள்வனவாளர்கள் யாரும் இருக்காமையினால் வங்கிக்கு ஆதனத்தினை உரிமையளிக்கப்பட்டது. ஆதனத்தினை மீண்டும் விற்பனை செய்வதற்கு வங்கி மனுக்கோரலை ஆரம்பித்ததுடன் 2024.08.02 இல் மனுக்கோரல் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டது, மற்றும் ஆதனத்தினை கொள்வனவு செய்வதற்கு ஒரு கொள்வனவாளர் மாத்திரமே காணப்பட்டார். | வேண்டும். |
| (உ) | 2018 யூன் 14 இல் ஆர்.பி.ஐ பிரைவேட் லிமிடெட் என்ற மாலைத்தீவு நிறுவனத்திற்கு தேசிய சேமிப்பு வங்கி மற்றும் மக்கள் வங்கியால் ஐ.அ.டொ 10 மில்லியன் ஒருங்கிணைந்த கடன் வசதி வழங்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கி ஐ.அ.டொ. 9 மில்லியனை இதற்கு பங்களித்தது, இது மொத்த கடனில் 90 சதவீதமாகும். 2024 மே 31 இல் உள்ளபடியான நிலுவையில் உள்ள ஐ.அ.டொ 4.18 மில்லியனுக்கான எந்தவொரு மூலதன திருப்பிச் செலுத்துதலினையோ அல்லது நிலுவை வட்டியையோ கடன் பெற்றவர் செலுத்தவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| | (i) சுற்றுலாத்துறையின் கீழ் இயங்கும் ஒரு வெளிநாட்டு நிறுவனத்திற்கு கட்டுமான நோக்கத்திற்காக மேற்கூறிய | தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பிரிவு 6 (எ) இன் படி, மற்ற வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடன் கடன்களை | என்.எஸ்.பி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்பிற்குள் ஒருங்கிணைக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | கடன் வழங்கப்பட்டது மற்றும் இது என்.எஸ்.பி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்குள் வராது. | ஒருங்கிணைப்பதில் பங்கேற்க வங்கிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br>மேலும், கடன் வழங்குவதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியின் அனுமதியும் தேசிய சேமிப்பு வங்கியின் சட்டப் பிரிவின் தேவையான சட்ட அனுமதியும் பெறப்பட்டது. | கடன்களுக்காக வங்கி பங்கேற்க வேண்டும். |
| (ii) | கடன் வழங்குவதற்கு முன்னர் வங்கி வாடிக்கையாளரின் விரிவான கடன் மதிப்பீடு அல்லது இடர் மதிப்பீடுகளைச் மேற்கொண்டுள்ளதா என்பதை நிரூபிக்க எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை. | மதிப்பீடு :<br><br><u>நாடு மற்றும் துறை இடர்</u><br>மாலைதீவின் பொருளாதாரம் குறித்து ஒரு கருத்தைப் பெறுவதற்காக மாலத்தீவு நாணய ஆணையத்தால் வெளியிடப்பட்ட மாதாந்திர பொருளாதார மதிப்பாய்வுகளை வங்கி ஆராய்ந்தது, அதே நேரத்தில் சுற்றுலாத் துறை பற்றிய விவரங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தியது. நிதி முன்னறிவிப்புகளில் பயன்படுத்தப்படும் ஆக்கிரமிப்பு விகிதங்கள் போன்ற அனுமானங்களின் நியாயமான தன்மை பற்றி மாலைதீவு நாணய சபையால் வெளியிடப்பட்ட மாதாந்திர பொருளாதார மதிப்பாய்வுகளில் வெளியிடப்பட்ட தரவுகளுடன் குறுக்கு சரிபார்க்கப்பட்டது.<br>மேலும், மாலத்தீவில் உள்ள இதேபோன்ற ஹோட்டல்களின் அறை விகிதங்களை சில ஹோட்டல் வலைத்தளங்களிலும், சுற்றுலாக ஆலோசகர் (Trip Advisor) போன்ற மூலங்களிலிருந்தும் ஒப்பிட்டு மதிப்பீடு செய்யப்பட்டது. சுயாதீன மதிப்பீட்டை மேற்கொள்ளும் போது இந்த விடயங்கள் வங்கியால் கவனத்தில் கொள்ளப்பட்டன.<br><br><u>சட்ட இடர்</u><br>சட்ட ரீதியான ஆபத்தை ஈடுகட்டுவதற்கு தேவையான அனுமதிகள் தேசிய சேமிப்பு வங்கியின் சட்டப் பிரிவிடமிருந்து பெறப்பட்டன. | இந்த வகை வசதிகளினை வழங்குவதற்கு முன்பு வங்கியால் விரிவான கடன் மதிப்பீடும், இடர் மதிப்பீடும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) | கடன் மறுஆய்வு பொறிமுறை தொடர்பில் 1641/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் | பெருநிறுவன நிதிப் பிரிவு தொடர்புடைய கடன் கோப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய பாதுகாப்பு ஆவணங்களை | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நியாயமான |

| | | | |
|---|---|---|---|
| | கடனுக்கு அங்கீகாரம் வழங்கிய பின் 3 மாதங்களுக்குள் வங்கி கடன் வசதியை மீளாய்வு செய்யவில்லை. | பின்வரும் நாட்களில் இடர் முகாமைத்துவப் பிரிவிற்கு அனுப்பி வைத்துள்ளது. 27/08/2018, 19/11/2018, 07/02/2019, 09/04/2019, 10/07/2019, 18/10/2019, 23/10/2019, 13/11/2019 | காலப்பகுதிக்குள் வங்கியின் இடர் பிரிவு கடனை மீளாய்வு செய்ய வேண்டும். |
| (iv) | 2018 யூன் 21 முதல் பெறப்பட்ட முதல் கடன் திகதியிலிருந்து மூலதன திருப்பிச் செலுத்துவதற்கு ஒரு வருட ஆரம்ப சலுகை காலத்தை வங்கி வழங்கியுள்ளது. இருப்பினும், பல காரணங்களைக் கூறி 2018 யூன் முதல் 2022 யூன் வரை மூலதனம் மற்றும் வட்டியினை திருப்பிச் செலுத்துவதற்கான ஆரம்ப சலுகை காலம் பல முறை நீட்டிக்கப்பட்டது. | வணிக இடையூறுகள் மற்றும் கட்டுமான தாமதங்களினால் உண்டான விளைவை உள்ளடக்கி பல்வேறு காரணங்கினை மேற்கோள்காட்டி வாடிக்கையானரினால் விடுக்கப்பட்ட கோரிக்கையினை கருத்திற்கொண்டு ஆரம்ப சலுகை காலப்பகுதியை நீடிப்பதற்கு இயக்குனர் சபை அங்கீகாரம் அளித்தது. | வங்கிக்கான சாத்திய நட்டங்களினை குறைப்பதற்கு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (v) | இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் பணிப்பாளர் சபை மேற்படி செயற்திட்டத்திற்கு நிவாரண வசதிகளினை வழங்கியிருந்த போதிலும், கடன் பெறுபவர் வெளிநாட்டு நிறுவனமாக இருப்பதால் மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் மேற்பார்வையின் கீழ் மேற்குறிப்பிட்ட கடன் வராது. | இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரின் 2020 மே 14 ஆம் திகதிய பதிலுரைக்கு அமைவாக, இவ்வகையான வசதிகளுக்கு எந்தவொரு சலுகையையும் வழங்குவது என்பது வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க வங்கியினால் எடுக்கப்பட வேண்டிய வியாபார முடிவாகும். அதற்கேற்ப வாடிக்கையாளரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் வங்கி நிவாரணங்களினை வழங்கியது. | இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட தொடர்புடைய பணிப்புரைகள் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்குவது அவசியமாகும். |
| (vi) | 2021 யூலை மாத காலத்திற்குப் பின் காப்பீட்டுத் தொகை வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023.07.24 இல் காப்பீட்டு திட்டம் புதுப்பித்தலை சமர்ப்பிக்க வாடிக்கையாளருக்கு நினைவூட்டல் அனுப்பப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட காப்புறுதிக் கொள்கை இது வரை பெறப்படவில்லை. | சரியான நேரத்தில் காப்புறுதி கொள்கையினை புதுப்பிப்பதனை வங்கி கண்காணித்து பின்பற்ற வேண்டும். |
| (vii) | கடன் ஒப்பந்தத்திற்கு அமைவாக கடன் சேவை இருப்புக் கணக்கு (டி.எஸ்.ஆர்.ஏ) வங்கியில் திறக்கப்பட்டு குறைந்தபட்சம் | நிலுவையாக மாறிய போது இந்தக் கணக்கில் உள்ள மீதியினைக்கொண்டு நிலுவைத் தொகையை வசூலிக்க பயன்படுத்தப்பட்டது. டி.எஸ்.ஆர்.ஏ | கடன் ஒப்பந்தத் தேவையின் பிரகாரம் கடன் சேவை இருப்புக் கணக்கை உருவாக்குவதை |

<table>
<tr>
<td></td>
<td>ஐ.அ.டொ. 270,000 மதிப்புடன் பராமரிக்கப்பட வேண்டும். இருப்பினும், டி.எஸ்.ஆர்.ஏவில் குறைந்தபட்ச இருப்பு கடன் பெறுபவரால் (ஆர்.பி.ஐ) பராமரிக்கப்படவில்லை மற்றும் 2024 மே 31 இல் உள்ளபடியாக அந்த கணக்கின் மீதி ஐ.அ.டொ. 27,533.23 ஆக இருந்தது.</td>
<td>அதன் குறைந்தபட்ச இருப்பு வரை நிரப்புமாறு கோரியபோதும் இது செய்யப்படவில்லை.<br><br>டி.எஸ்.ஆர்.ஏ ஊடாக தவணைக்கொடுப்பனவின் தீர்ப்பனவு பின்வருமாறு;<br>
<table>
<tr><th>Recovery date</th><th>Amount (USD)</th><th>Installment date</th></tr>
<tr><td>May-2019</td><td>72,647.42</td><td>March -2019</td></tr>
<tr><td>May-2019</td><td>78,974.62</td><td>April -2019</td></tr>
<tr><td>May-2019</td><td>76,558.58</td><td>May-2019</td></tr>
<tr><td>Jan-2023</td><td>13,004.76</td><td>Penal Int</td></tr>
</table>
</td>
<td>வங்கி கண்காணிக்க வேண்டும்.</td>
</tr>
<tr>
<td>(viii)</td>
<td>கடன் ஒப்பந்தத்தின்படி, கடன் வழங்குநர்கள் செயற்திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க ஹோட்டல் கட்டுமானத்தில் தகுதிவாய்ந்த நிபுணரை ஒரு சுயாதீன செயற்திட்ட அதிகாரியாக நியமிக்க வேண்டும். எவ்வாறாயினும், கடன் வழங்குநர்கள் அத்தகைய நபரை நியமிக்கவில்லை மற்றும் கடன் பெறுபவரால் (ஆர்பிஐ கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்) நியமிக்கப்பட்ட பட்டய அளவு அளவையர் முன்னேற்ற அறிக்கையை நம்பியுள்ளனர்.</td>
<td>முகமட் சோலா சமர்ப்பித்த முன்னேற்ற அறிக்கைகளைத் தொடர இரு ஒருங்கிணைந்த கடன் வழங்குநர்களும் (என்.எஸ்.பி மற்றும் மக்கள் வங்கி) முடிவு செய்தனர், ஏனெனில் அவர் இது போன்ற ஒரு செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையை வழங்க தேவையான தகுதிகளைக் கொண்ட ஒரு தொழில்நிபுணத்துவர் ஆவார்.</td>
<td>கடன் பெறுபவரால் நியமிக்கப்படும் அளவையாளரைச் சார்ந்திருக்காமல் கடன் பெறுபவரிடமிருந்து சுயாதீனமாக இருக்கக்கூடிய தகுதிவாய்ந்த நிபுணரை வங்கி நியமித்திருக்க வேண்டும்.</td>
</tr>
<tr>
<td>(ix)</td>
<td>கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, சிவில் பொறியியலாளர்கள் போன்ற தேவையான தொழில்நுட்ப திறன்கள் மற்றும் ஆற்றலினைக் கொண்ட ஒரு சுயாதீன தரப்பினரோ அல்லது அதிகாரிகளோ எந்தவொரு தள விஜயத்தினையும் மேற்கொள்ளவில்லை. இந்த நிர்மாணப் பணிகளை ஆராய்வதற்குத் தேவையான திறன்களைக் கொண்ட ஆற்றலுடைய உத்தியோகத்தர்கள்</td>
<td>தள விஜயம் மற்றும் பரீட்சீப்புகளினை கடன் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுவது பெருநிறுவன நிதிப் பிரிவின் பொதுவான நடைமுறையாகும். முகாமைத்துவத்தின அறிவுறுத்தல்களினை படி பெருநிறுவன நிதிப் பிரிவில் உள்ள உத்தியோகத்தர்களினால் தள விஜயம் மற்றும் பரீட்சீப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு முன்னரும் தள விஜயத்திற்காக வங்கியினால் சுயாதீன தரப்பினர்கள் பயன்படுத்தப்பட்டதற்கான எவ்வித நிகழ்வுகளும் பதிவு</td>
<td>தேவையான தொழில்நுட்ப திறன்கள் மற்றும் ஆற்றல்களினைக் கொண்ட அதிகாரிகளால் தள விஜயம் மேற்கொள்ளப்பட வேண்டும்.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | வங்கியில் இருந்த போதிலும், நிர்மாணப் பணிகளின் தரம் மற்றும் நிறைவைக் கவனிப்பதற்கான தொழில்நுட்பத் திறன்கள் இல்லாத கடன் பிரிவின் உத்தியோகத்தர்களினால் வங்கித் தரப்பிலிருந்து தள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | செய்யப்படவில்லை. | |
| (x) | 2022 யூலை 04 ஆம் திகதிய வாரியக் குறிப்பு எண் 207/2022 இன் படி, சட்டம், பொறியியல், நிதி மற்றும் ஒழுங்குபடுத்தல், கடன் போன்ற பல்வேறு கண்ணோட்டங்களில் ஆர்பி வசதியை உயர் மட்ட மீளாய்வு செய்வதற்கும், ஆர்பி (பிரைவேட்) லிமிடெட்டின் அனைத்து நிலுவைத் தொகையையும் மீட்டெடுப்பதற்கான மிகவும் விவேகமான செலவு குறைந்த மற்றும் விரைவான நடவடிக்கைகள் குறித்து அந்தந்த சபைக்கு ஆலோசனை வழங்குவதற்கும் ஒரு சுயாதீன ஆலோசகரை நியமிக்க சபை முடிவு செய்துள்ளது.<br><br>• 288/2022 ஆம் இலக்க சபைப் பத்திரத்தின் பிரகாரம், ரூபா 9.684 மில்லியன் குறிப்பிடத்தக்க ஈடுபடுத்தல் கட்டணத்தை செலுத்துவதன் மூலம் மேற்படி பணிகளை மேற்கொள்வதற்காக இலங்கையில் உலகளாவிய கணக்கியல் நிறுவனமொன்றை நியமிப்பதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. குறித்த ஈடுபடுத்தல் கட்டணத்தில் 75 சதவீதத்தை வங்கி ஏற்கனவே செலுத்தியுள்ளது. | • ஈடுபடுத்தல் கடிதத்தின் பிரகாரம் பின்வரும் கொடுப்பனவு கட்டமைப்பிற்கு உடன்பட்டது:-<br><br>ஈடுபடுத்தல் கடிதத்தில் கையெழுத்திடல் தொடல்பில் - 50% (ரூபா 4,842,200.00)<br><br>வரைவு அறிக்கையினை வெளியிடல் தொடர்பில் - 25 (ரூபா 2,421,100.00)<br><br>இறுதி அறிக்கையினை வெளியிடல் தொடர்பில் - 25 (ரூபா 2,421,100.00)<br><br>• இது வரை பின்வரும் கொடுப்பனவுகளினை வங்கி செலுத்தியுள்ளது:-<br><br>நிதி மற்றும் தொழில்நுட்ப தொழிற்துறை சேவைகளின் 75 %<br><br>சட்ட மற்றும் வரி தொழிற்துறை சேவைகளின் 50 %<br><br>• 2022.11.14 முதல் 2022.11.17 வரையில் ஆரம்பத்தில் சுயாதீன அளவையாளர்கள் ஆர்.பி.ஐ தளத்திற்கு விஜயம் செய்ய திட்டமிட்டனர். ஆர்.பி.ஐ இடமிருந்து பதிலளிப்பு கிடைக்காமையினால் இது தாமதமானது. அதன் பின்னர், 2023.01.03 முதல் 2023.01.04 வரையான காலப்பகுதியின் போது சுயாதீன அளவையாளர்களினால் ஆர்.பி.ஐ தளத்தின் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டது.<br><br>• 2022.11.04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பி.டிபில்யூ.சீ இனால் கோரப்பட்ட ஆவணத்தினை வழங்குமாறு ஆர்.பி.ஐ யிடம் வங்கி வேண்டுகோள் விடுத்தது. | கடன்களினை வழங்குவதற்கு முன்பு முறையான வாடிக்கையாளர் மதிப்பீடு செய்து, மற்றும் கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு சகல முயற்சிகளையும் எடுத்து மற்றும் வங்கியின் செயல்படாத கடன் நிலுவையினை குறைப்பதற்கு வங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>வங்கியின் பொறுப்பாக இருக்கின்ற கோரப்பட்ட சகல தவகவலையும் வழங்குவது அவசியமாகும். |

- மேற்படி திட்டத்தின் இறுதி அறிக்கையை ஈடுபடுத்தல் திகதியிலிருந்து ஆறு வாரங்களுக்குள் வழங்க அந்த கணக்கியல் நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது. எவ்வாறாயினும், பல முறை கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், கணக்காய்வு திகதியான 2024 மே 31 வரை குறித்த அறிக்கை கணக்காய்வாளரின் மீளாய்வுக்கு கிடைக்கப்பெறவில்லை. குறித்த அறிக்கையை கணக்காய்விற்கு வெளியிடுமாறு சட்டமா அதிபரின் ஆலோசனையையும் பணிப்பாளர் சபையிடமிருந்து அறிவுறுத்தல்களையும் வங்கி பெற்று வருவதாக பிரதி பொது முகாமையாளர் (சட்டம்) 2023 ஆகஸ்ட் 31 அன்று தெரிவித்தார்.

- RPI செயற்திட்டத்தின் தற்போதைய நிலை, சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு மற்றும் இந்த கடனின் நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதற்கான மிகவும் விவேகமான வழிகளை அடையாளம் காண மேற்கூறிய அறிக்கையிலிருந்து வங்கி ஏதேனும் ஆதரவைப் பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்த கணக்ககாய்வுக்கு எந்த ஆதாரங்களும் கிடைக்கவில்லை.

- மேலும் 2024.03.09 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வரலாற்று நிதி பதிவேடுகள், செயற்திட்ட எதிர்வுகூறல் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகள், பாதீட்டு மற்றும் உண்மை மூலதன செலவின தொகைகள் என்வற்றுடன் தலைமை குத்தகை கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய தொடர்பாடலினையும் சேர்த்து அணுகலை வழங்குவதற்கும், அதே போன்று வருங்கால முதலீட்டாளர்களுடன் ஆர்.பி.ஐ இனால் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்களுடன் தொடர்புடைய ஏதாவது விளக்கங்கள் மற்றும் தற்போதைய அபிவிருத்திகள் தொடர்பாக ஆர்.பி.ஐ கணக்காய்வாளர்களினை அணுகுவதற்கும் வங்கி ஆர.பி.ஐ யிடம் கோரியது.

- மேற்படி கோரிக்கைக்கு ஆர்.பி.ஐ யிடமிருந்து சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை.

- 2023.04.04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வரைவு நிதி, வரி, சட்டம், ஒழுங்குபடுத்தல் அறிக்கையினை பி.டபில்யூ.சீ அனுப்பியதுடன், ஆர்.பி.ஐ இனால் முக்கிய தகவல் வழங்கப்படாமை காரணமாக நிதி மற்றும் வரி மீளாய்வினை பூர்த்தி செய்யமுடியாதுள்ளதாக பி.டபில்யூ.சீ தெரிவித்தது.

- விடுவித்தல் ஆவணங்கள் தொடர்பாக கௌரவ சட்டமா அதிபரிடம் இருந்து எவ்வித குறிப்பிடத்தக்க பதில்களினையும் வங்கி பெறவில்லை.

- 2024.03.11 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சட்டமா அதிபர் 04 தெரிவுகளுடன் ஆர்.பி.ஐ

நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை தொடர்வது குறித்து வங்கியிடம் அறிவுரை வழங்கினார். அவை மேலதிக அறிவுறுத்தல்களுக்காக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2024.05.03 அம் திகதிய குறிப்பின் பிரகாரம் தெரிவு I இன் அடிப்படையில் வழக்குத் தொடர சபை முடிவு செய்துள்ளது.

- அதே சமயம், 2024.05.22 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சுயாதீன நிதி மற்றும் வரி மீளாய்வு, மதிப்பீட்டு அறிக்கை, சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் மீளாய்வு என்பவற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தவவலை வங்கி கௌரவ சட்டமா நாயகத்திற்கு அனுப்பியுள்ளது.

- 2024.08.08 ஆம் கடிதத்தின் மூலம் கௌரவ சட்டமா நாயகம் வங்கியினால் வழங்கப்பட்ட குறித்த தகவல்களினை அடிப்படையாகக் கொண்டு மேலதிக அறிவுரையிளை வங்கிக்கு வழங்கியது.

- இயக்குனர் சபையினால் அறிவுறுத்தப்பட்டதற்கு அமைவாக நித்யா பார்ட்னர்ஸ், சட்ட நிறுவனத்திற்கு இந்த விடயம் குறிப்பிடப்பட்டு 2024.08.12 இல் பொது முகாரமையாளர்/சீ.ஈ.ஓ பங்குபற்றுதல்களுடன் ஆரம்ப மதியுரை இடம்பெற்றது. அதன் பின்னர், மேலதிக அறிவுரைக்காக 2024.08.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் நித்யா பார்ட்னர்ஸ் நிறுவனத்திற்கு உரிய ஆவணங்கள் அனுப்பப்பட்டன.

- மதிப்பீட்டு அறிக்கை மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் மீளாய்வு என்பவற்றில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பின்னிணைப்பு

(ஊ) 2019 செப்டெம்பர் 23 ஆம் திகதி (கடன் இலக்கம் - 603086247060) முகம்மட் சியாம் முகம்மட் சஹாரான் என்பவருக்கு ரூபா 12.6

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் கடனை வங்கி வழங்கியது. 2024 மே 31 இல் உள்ளபடியாக நிலுவைத் தொகை மற்றும் தவணைகளின் மொத்த நிலுவைத் தொகை முறையே ரூபா 12.930 மில்லியன் மற்றும் ரூபா 7.664 மில்லியன் ஆகும். வீடு மற்றும் ஆதனம் கொள்வனவு செய்வதற்காக மேற்படி கடன் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் முன்வைக்கப்படுகின்றன. | | |
| (i) | 3வது திருத்தப்பட்ட 955/2018 ஆம் ஜீ.எம் சுற்றறிக்கையின் பிரகாரம், கடன் குழுவினால் ரூபா 12 மில்லியனிற்கு மேற்பட்ட கடன் அங்கீகரிக்கப்பட வேண்டும். எனினும், மேற்படி ரூபா 12.6 மில்லியனுடைய கடனை உதவி பொது முகாமையாளரால் (ஏ.ஜி.எம்) (கிரெடிட்) மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | 3வது திருத்தப்பட்ட 955/2018 ஆம் ஜீ.எம் சுற்றறிக்கையின் பிரகாரம், ''கிளைகளின் என்.பீ.ஏ விகிதங்கள் மூலம் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகத்தின் கடன் வரிசையின் அதிகார வரம்பு பாதிக்கப்படமாட்டாது''. அதன்படி 955/2018 ஆம் ஜீ.எம் சுற்றறிக்கையின் ரூபா 15 மில்லியன் வரையான வழங்கப்பட்ட அதிகார வரம்பிற்கு அமைவாக ஏ.ஜி.எம் (கிரெடிட்)இனால் இந்தக் கடன் கோவை அங்கீகரிக்கப்பட்டது. | வங்கியினால் அமுல்படுத்தப்பட்ட அதிகார வரம்பு கையளிப்புடன் இணங்குவதனை வங்கி நிச்சயித்துக்கொள்ள வேண்டும். |
| (ii) | இந்த கடன் பெறுபவரின் CRIB நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 10 கடன் வசதிகளின் ஒழுங்கற்ற மறு கொடுப்பனவுகளை கருத்தில் கொள்ளாமல் ஏஜிஎம் (கிரெடிட்) இந்த கடனுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. | எவ்வாறாயினும், டி.ஜீ.எம் (கிரெடிட்) மூலம் CRIB அறிக்கை தொடர்பான குறிப்பு காணப்படுகிறது, இதில் CRIB வரலாறு ஒழுங்கற்றதாக இருக்கும் பட்சத்தில் கடன் மறு கொடுப்பனவினை உன்னிப்பாக மேற்பார்வை செய்ய அறிவுறுத்துகின்றது. | வங்கியின் கடன் கொள்கையின் பிரகாரம் கடன்களினை வழங்குவதற்கு முன் வாடிக்கையாளர் மீள்செலுத்துதல் நிலைமையினை வங்கி மதிப்பீடு செய்ய வேண்டும். |
| (iii) | 2017 ஆகஸ்ட் 10 திகதி சஹாரான் எண்டர்பிரைசஸ் கடனைப் பெறும்போது இல.WA/11923 உடைய வணிக பதிவு பத்திரத்தை வழங்கியது. எவ்வாறெனினும், மாகாண | 2017.08.10 ஆம் திகதிய மாகாண வியாபாரப் பெயர்கள் பதிவுத் திணைக்களம் - மேல் மாகாணம் மூலம் வழங்கப்பட்ட ''நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழ்'' இன் மொழிபெயர்ப்பு பிரதியொன்றினை வாடிக்கையாளர் வழங்கினார். | வங்கி முறையாக உருவாக்கப்பட்ட வணிகங்களுக்கே கடன்கள் வழங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வியாபாரப் பெயர்கள் பதிவுத் திணைக்களம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இணையத்தளத்தின் கீழ் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் மொழி மாற்று விவகாரங்களுக்கு வழங்கும் வியாபாரமாக மேற்படி வியாபாரத்துடன் தொடர்புடைய எந்தவொரு வியாபாரப் பதிவையும் கணக்காய்வாளர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. | பி.எஸ். அழகன எனும் சமாதான நீதவானால் (பதிவு இல: 09/3/nm /uos/188) உண்மை பிரதியாக சான்றுபடுத்தப்பட்டுள்ளது. | . |
| (iv) | 2024 மே 31 வரை இந்த கடனை பெற்றவர் ஒரு (01) தவணையை மட்டுமே திருப்பிச் செலுத்தினார் மற்றும் ஏஜிளம் (மீட்பு) 2022 யூலை 19 இல் கடன் பெற்றவருக்கு ஆதனத்தின் ஏலம் தொடர்பாக இறுதி அறிவிப்பினை அனுப்பினார். வங்கி பரடேயினை (parate) செயற்படுத்திய போது 2023 ஜனவரி 18 இல் வாடிககையாளர் ஏலத்தினை தடுப்பதற்கான தடை உத்தரவை பெற்றுள்ளார். ஆகையினால், கடனுக்கு எதிராக மீட்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கு வங்கி தோல்வியுற்றது. | இந்தக்கடனை அறவீடு செய்வதற்க விரைவான அறவீட்டு நடவடிக்கைகளினை வங்கி எடுத்தது.<br>• தொலைபேசி ஊடாக நிகழ்கின்ற மீதிகள் தொடர்பாக வாடிக்கையாளரிடம் தெரிவிக்கப்பட்டது.<br>• 2020.01.17 இல் முதலாவது நினைவூட்டனினை அனுப்பியது.<br>• 2020.01.28 இல் இரண்டாவது நினைவூட்டனினை அனுப்பியது.<br>• 2020.02.13 இல் இறுதி அறிவித்தலை அனுப்பியது.<br>• 2020.03.05 இல் ஆதனத்திற்கு விஜயம் செய்தது.<br>• 2020.12.02 இல் கோரிக்கைக் கடிதத்தினை வாடிக்கையாளருக்கு அனுப்பியது.<br>• 2021.01.29 இல் பொது ஏலத்தின் ஊடாக ஆதன விற்பனை தொடர்பில் வாடிக்கையாளருக்கு இறுதி அறிவித்தலை சட்ட அலுவலகர் அனுப்பினார், மற்றும் கடிதம் வங்கிக்கு திருப்பப்பட்டது.<br>• பின்னர், 2021.03.16 இல் வாடிக்கையாளரினை தொடர்புகொண்டு அவருடைய செயலாளரிடம் இறுதி | இந்தக் கடனை அறவீடு செய்வதற்கு வங்கினால் சாத்தியமான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். |

அறிவித்தல் கையளிக்கப்பட்டது.

- 2023.01.19 இல் பொது ஏலம் தீர்மானிக்கப்பட்டது.
- 2023.01.18 இல் ஏலத்தினை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தடை உத்தரவினை வாடிககையார் பெற்றார்.
- எவ்வாறாயினும் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவு காரணமாக இது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.
- 2023.06.21 இல் தடை உத்தரவிற்கு எதிரான ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டது. 2024.01.09 இல் வழக்கு அழைக்கப்பட்டு வங்கிக்கு சாதகமாக கட்டளை அனுப்பப்பட்டது.
- வாதியினால் (திரு. எம்.எஸ்.ஏ. ஸஹறான்) கோரப்பட்ட இடைக்கால தடை உத்தரவினை மாவட்ட நீதிமன்ற நீதிபதி நிராகரித்துள்ளார். முன் விசாரணைக்காக பதில்கள் கோவைப்படுத்தப்பட்டுள்ளன. 2024.08.09 இல் முன் விசாரணை மாநாடு அழைக்கப்பட்டது. முன் விசாரணை அல்லது தீர்ப்பனவு 2024.12.20 இல் திட்டமிடமிடப்பட்டுள்ளது.

(எ) என்.எஸ்.பி இன் முதல் 25 வாடிக்கையாளர்களுக்கு மொத்தம் ரூபா 786.552 மில்லியன் தொகையுடைய 55 எண்ணிக்கையிலான கடன்கள் வழங்கப்பட்டன, மற்றும் 2023 செப்தெம்பர் 30 இல் உள்ளபடியான அந்த கடன்களில் இருந்து அறவிடவேண்டிய மொத்த மீதி ரூபா 838.678 மில்லியனாக இருந்ததுடன், வழங்கப்பட்ட தொகையில் இது 106 சதவீதத்தினை பிரதிபலிக்கின்றது. அவைகளில் 38 சதவீதமானவை ‘‘நட்டம்’’ என்ற வகையினுள் இருந்தன. அந்த முதல் 25 செயல்பாடற்ற கடன்கள் தொடர்பில் நிறைவேற்றப்பட்ட மாதிரி கணக்காய்வு சோதனை தொடர்பில் பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் ரூபா 20 மில்லியன் தொகையுடைய கடன் (கடன் இலக்கம் - 60308629321) இரண்டு ஆண்டுகளுக்காக நிலையான வட்டி வீதத்திலும் பின்னர் மிதக்கும் வீதத்திலும் வழங்கப்பட்ட போதிலும் இது கடைப்பிடிக்கப்படவில்லை. | இது ஒரு செயல்பாடற்ற கடனாக உள்ளமையினால் கடன் வட்டி வீத் மாற்றப்படவில்லை. | கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் வங்கி இணங்க வேண்டும். |
| (ii) ரூபா 26.6 மில்லியன் தொகையுடைய கடன் ஒன்றினை (603086310931) வழங்கும் போது வணிக வருமானம் அல்லது இலாபம் முறையாக மதிப்பீடு செய்யப்படவில்லை. | கம்பனியின் ஆரம்பத்தில் 02 இயக்குனர்கள் காணப்பட்ட போதிலும் 2021 இல் ஒரு இயக்குனர் அல்லது பங்குதாரர் இராஜினாமா செய்ததுடன் அந்த இயக்குனர் அல்லது பங்குதாரர் வைத்திருந்த பங்குகளினை திரு. ஏ.ஜீ.பீ.ஐ. பெரேரா என்பவருக்கு மாற்றப்பட்டது. இது முறையாக ஆவணப்படுத்தப்பட்டதுடன் 2021 செப்தெம்பர் மாதத்தில் 603086297651 ஆம் கடன் இலக்கத்தின் கீழ் வாடிக்கையாளரினால் பெறப்பட்ட மற்றைய கடன் தொடர்பாக நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள் காணப்பட்டன.<br><br>இந்த தகவலின் அடிப்படையில் வணிகத்திடம் இருந்தான இலாபம் முழுவதும் தனி இயக்குனரின் இலாபமாக கருதப்படும். | கடன் வழங்குவதற்கு முன்னர் வணிக வருமானம் அல்லது இலாபம் வங்கி முறையாக மதிப்பீடு செய்ய வேண்டும். |
| (iii) வாடிக்கையாளரின் முன்னைய செயல்பாடற்ற நிலையினை கருத்திற் கொள்ளாமல் ரூபா 28 மில்லியன் (603086275196) தொகையுடைய கடனுக்கான அங்கீகாரத்தினை வங்கி வழங்கியுள்ளது. | சீ.சீ இன் அங்கீகாரத்துடன் இந்தக் கடன் வழங்கப்பட்டது.<br><br>*<u>CRIB அறிக்கையின் நிலை</u>*<br><br>CRIB அறிக்கையில் 04 கடன் வசதிகளும் 01 கடன் அட்டை வசதியும் காணப்பட்டன. CRIB அறிக்கையில் உள்ள வசதிகளின் நிலை பின்வருமாறு,<br><br>கடன் 1 – முன்மொழியப்பட்ட வசதியினை வழங்கும் நேரத்தில் முழுமையாக தீர்க்கப்பட்டிருந்தது.<br><br>கடன் 2 மற்றும் 3 – தொடரும் முன்மொழியப்பட்ட வசதியில் இருந்து தீர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது.<br><br>கடன் 4 – 03 நாட்கள் கொண்ட | கடன் வழங்கும் முன்பதாக வாடிக்கையாளரின் முன்னைய செயல்பாடற்ற நிலையினை வங்கி கருத்திற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | தவணை நிலுவை.<br>கடன் அட்டை – 12 நாட்கள் கொண்ட தவணை நிலுவை. |

### 3.3.2 அட்டை மைய செயல்பாடு (Card Centre Operation)

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது ATM சுவிட்சின் (CAS) செயற்பாடுகள் தொடர்பாக 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்வு முறைமை சட்டத்தின் கீழ் 2022 பெப்ரவரி 28 ஆம் திகதியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க பொது வழிகாட்டலின் 5.6 ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு CAS உறுப்பினரும் தரவுத்தளங்கள் மற்றும் அதன் அனைத்து தகவல்கள் மற்றும் தரவுகளின் வழக்கமான காப்புப்பிரதிகளை உருவாக்குவதற்கும் முறைமை செயலிழப்பு அல்லது தரவு ஊழல் அல்லது தரவு இழப்பு ஏற்பட்டால் மீட்பு நடைமுறைகளை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்கும் பொறுப்பாவார்கள். இருப்பினும், வாடிக்கையாளர் பணத்தைத் திரும்பப் பெறுதல், முரண்பாட்டினை கையாளுதல், கட்டணத் தளிரும்பப் பெறுதல் மற்றும் இணக்கம் செய்தல் போன்ற சில முக்கிய செயல்பாடுகளுக்கு தானியங்கி காப்புப்பிரதி நடைமுறையைப் பராமரிக்க அட்டை மையம் தவறிவிட்டது. | காப்புப்பிரதி தொடர்பான அனைத்து மறைகுறியாக்க IT பிரிவினால் எடுக்கப்படுகின்றன. மற்றும், 2024 இல் அட்டை மையத்தில் “Network Accessible Storage” (NAS) அமுல்படுத்தலுடன் சகல மத்திய காப்புப்பிரதியில் நாளாந்த நடவடிக்கைகள் மற்றும் கோவைகள் என்பன மறைகுறியாக்கப்பட்டு சேமிக்கப்படுகின்றன. | முக்கிய செயல்பாடுகளுக்கான தானியங்கி காப்புப்பிரதி செயல்முறை சீரான செயல்பாட்டிற்காக அட்டை மையத்தால் பராமரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதான முகாமையாளரின் கடமைகள், இரண்டாம் அலுவரின் கடமைகள், லங்கா பே, வீசா & மாஸ்டர் கார்ட் இன்டர்சேஞ்ச் நடவடிக்கைகள் மற்றும் தலைமை அலுவலக் கணக்கு இணக்கங்கள் போன்ற அட்டை மையத்தின் முக்கிய சில செயற்பாடுகள் என்பன மோசடிகளினால் ஏற்படக்கூடிய இடரினை குறைத்துக்கொள்வதற்கான சுழற்சியின்றி ஒரே நபரினால் செயற்படுத்தப்பட்டுள்ளன. | உள்ளக-பரிமாற்றம் தொடர்பான வேலைகளினை கையாள்வதற்கு சிறப்புத்தேர்ச்சி பெற்றிருப்பது அவசியமாகும். எனினும், தற்போதுள்ள ஊழியரின் திறன்களை பயன்படுத்தி குறிப்பிட்ட அளவு வரை நாங்கள் சுழற்சியினை மேற்கொள்ள முகாமைத்துவம் செய்தோம். | மோசடி இடரினை தடுப்பதற்கு அடுத்தடுத்த இடைவெளிகளில் அட்டை மைய செயற்பாடுகள் தொடர்பான கடமைகளினை சுழற்சிப்படுத்த வேண்டும். |

### 3.3.3 பண மோசடி – எதிர்ப்பு அறிக்கையிடல் (Anti – Money Laundering) நடைமுறை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 இல் வங்கி 'COMPASS' AML எனும் மென்பொருளினை கொள்வனவு செய்ததுடன், 2023 ஒக்தோபர் 17 இல் இது காலாவதியாகியுள்ளது மற்றும் ஒவ்வொரு 06 மாதத்திற்கும் ஐ.அ.டொ. 16,500 செலுத்தி 2024 ஏப்ரல் 16 வரை முதல் நீடிப்பு எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும், அதன்பிறகு கணக்காய்வு திகதியான 2024 யூன் 30 வரை புதுப்பித்தல் செய்யப்படவில்லை. | 2017 இல் Compass AML முறைமையினை வங்கி கொள்வனவு செய்து 2023 திசெம்பர் 17 ஆம் திகதி வரை QDE உடன் பராமரிப்பு உடன்படிக்கையினை கைச்சாத்திட்டது. 2023 இல் இயக்குனர் சபை புதியதொரு முறைமையினை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்து 2023 ஜனவரி மாதத்தில் பெறுகை பூர்த்தி செய்யப்பட்டது. புதிய கோர் பேங்கிங் முறைமையுடன் புதிய AML முறைமையினை ஒருங்கிணைப்பதற்கு மிதக்கவிடப்பட்டது. கோர் பேங்கிங் முறைமையினை அமுல்படுத்துதல் தாமதிக்கபட்டதனாலும் காலக்கெடு திட்டவட்டமாக இல்லாததாலும் CIO இயக்குனர் சபைக்கு தெரிவித்து ஒவ்வொரு 3 மாதங்களுக்கும் பராமரிப்பு சேவையினை நீடிப்பதற்கு அங்கீகாரத்தினை பெற்றார். அதே விற்பனையாளருக்கு (QDE) புதிய AML முறைமையின் பெறுகை வழங்கப்பட்டதால் அமுல்படுத்தலுடன் பராமரிப்பு ஆதரவளிக்கப்பட்டது. | முறையான செயற்பாட்டினை உறுதிசெய்து கொள்வதற்கு வங்கி காலக்கிரம அடிப்படையில் மென்பொருளினை புதுப்பிக்க வேண்டும். |
| (ஆ) | இலக்கு வைக்கப்பட்ட நிதி தடைகளுக்கு இணங்கத் தவறியமையினால் 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதி பரிமாற்றங்கள் அறிக்கையிடல் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினை மீறியமைக்காக ரூபா 750,000 தண்டத்தினை செலுத்தியன் மூலம் வங்கிக்கு மேலதிக நட்டம் ஏற்பட நேரிட்டது. | இணங்குதல் பிரிவு வாடிக்கையாளர்களினை உள்வாங்கும் நேரத்தில் அதே போன்று தற்போதைய வாடிக்கையாளர்களினையும் திரையிட சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. இது தொடர்பாக சகல ஊழியர்களுக்கும் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு என்பன வழங்கப்படுகின்றன. | மேலதிக நட்டங்களினை தோற்கடிக்க வங்கி உள்ளக கட்டுப்பாட்டினை வலுப்படுத்த வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 ஆம் ஆண்டில் 38.8 பேர்ச் பரப்பளவு கொண்ட காணியை நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து 50 வருட காலத்திற்கு வங்கி பெற்றிருந்தது. இந்த காணியில் புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு நிர்வாகம் தீர்மானித்திருந்த போதிலும், இதுவரை எந்தவொரு நிர்மாணப் பணிகளும் ஆரம்பிக்கப்படவில்லை. | இந்த நிலம் 2008 ஆம் ஆண்டில் 50 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டது. 2009 நவம்பரில், வங்கி யு.டி.ஏ.வுடன் ஒரு கலந்துரையாடலை நடத்தியது, அதில் வங்கியின் தலைமை அலுவலக கட்டிடத்தை ஒட்டி 106.69 பேர்ச் பரப்பளவு கொண்ட நிலத்தை வங்கியின் குத்தகை நிலத்தில் அந்த நிலத்தின் ஆக்கிரமிப்பாளர்களை மீள்குடியேற்றம் செய்வதமை வெளிப்பட்டது. இதன் காரணமாக வங்கி அதன் பின்னர் குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தில் எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்திலும் ஈடுபடவில்லை. இருப்பினும், அந்த நிலத்தின் ஆக்கிரமிப்பாளர்களுக்கு 2020 ஆம் ஆண்டில் வேறு இடத்தில் வீடு வழங்கப்பட்டது. அதன் பின்னர், கொவிட் -19 பரவல் மற்றும் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை காரணமாக அபிவிருத்தி திட்டத்தை காலவரையின்றி ஒத்திவைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. | பயனற்ற சொத்துக்களை பயனுள்ள நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் புறக்கோட்டை கிளையின் பயன்பாட்டிற்காக 4 மாடி கட்டிடத்தை வங்கி வாடகைக்கு விட்டிருந்தாலும், 4,629 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடத்தின் இரண்டு தளங்கள் பயன்படுத்தப்படாமல் பயன்பாடின்றி உள்ளன. 2024 ஆம் ஆண்டு மே மாதம் வரை ரூபா 95.4 மில்லியன் வாடகைச் செலவாக வங்கி செலுத்தியுள்ளது. | முந்தைய இடத்தின் கட்டிட உரிமையாளர் கட்டிடத்தைவிட்டு வெளியேற வலியுறுத்தியுள்ளார், மேலும் வங்கி கிட்டத்தட்ட 1 வருட காலமாக புறக்கோட்டை யில் பொருத்தமான இடத்தைத் தேடி வருகிறது.பழைய கட்டடத்தை முழுமையாக புதுப்பிக்க திட்டமிடப்பட்டு, காலதாமதம் ஏற்பட்டதால், திட்டம் பலமுறை தள்ளி வைக்கப்பட்டது.இறுதியாக, கட்டிடத்தை காலி செய்ய வங்கி மேலும் தாமதித்தால் ஏதேனும் திரவத்தன்மை சேதங்களை செலுத்துமாறு கட்டிட உரிமையாளர் தெரிவித்தார்.<br><br>அச்சமயத்தில் தற்போதைய கட்டிடம் முன்மொழியப்பட்டதுடன், புறக்கோட்டை கிளையின் செயற்பாடுகளுக்கு அது மாத்திரமே பொருத்தமான இடமாக இருந்தது. கட்டிடத்தின் பரப்பளவு தேவைக்கு அதிகமாக இருந்தாலும், நிலைமையை கருத்தில் கொண்டு உத்தேச இடத்திற்கு ஒப்புதல் வழங்க வேண்டிய கட்டாயத்தில் நிர்வாகம் இருந்தது. கட்டிடத்தின் பரப்பளவு தவிர, | பயனற்ற சொத்துக்களை பயனுள்ள நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வாகன நிறுத்த வசதி, அதிக அடி போக்குவரத்து பகுதியில் இடம் ஆகியவற்றுடன் இந்த இடம் மிகவும் தெளிவாகத் தெரிகிறது. இந்த கட்டிடம் ஒரே நுழைவாயிலைக் கொண்டுள்ளது, மேலும் மூன்று தளங்களுக்கும் கட்டிடத்தின் வழியாக தெரு வழி செல்கிறது.<br><br>இருப்பினும், வங்கி 3 மற்றும் 4 வது மாடிகளை பயிற்சி மற்றும் கருத்தரங்குகளை நடத்த பயன்படுத்துகிறது, மேலும் அதன் ஒரு பகுதி தற்போது சுற்றியுள்ள கிளைகளால் களஞ்சிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது. அனைத்து தளங்களும், 100 ஆண்டுகளுக்கு முன், மர அமைப்பில் கட்டப்பட்டதால், மேல் தளங்களில் அதிக பாரம் ஏற்றுவதற்கு பயன்படுத்தும் அபாயம் உள்ளது. மேலும், ஏற்கனவே புனரமைப்பு நிறைவடந்துள்ள அவருடைய வளாகத்தினை மீண்டும் பெறுவதற்கு முன்னைய கட்டிட உரிமையாளருடன் வங்கி பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. | |
| (இ) | கொட்டாவ கிளை தற்போதுள்ள கட்டிடத்தின் முதல் மாடியை 2020 ஆகஸ்ட் முதல் 2025 ஆகஸ்ட் வரை (5 ஆண்டுகள்) மாதாந்த வாடகையாக ரூபா.200,000 க்கு பெற்றுள்ளது. ஆரம்பத்தில், கிளை ரூபா.3.6 மில்லியனை வாடகை முன்பணமாக (18 வாடகைகள்) செலுத்திய போதிலும், மற்றும் அதன்பின்னர் 2023 ஆம் ஆண்டில் கீழ் தளம் மற்றும் முதலாவது மாடிக்கான வாடகையாக ரூபா 7.085 மில்லியனை செலுத்திய போதிலும், புதுப்பித்தலில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2024 மே 31 வரை அந்த முதலாவது மாடியை பயன்படுத்தவில்லை. | கொட்டாவ கிளையின் மேல் தளம், நெருக்கடியான நிலைமை காரணமாக தற்போதுள்ள கிளையை விரிவுபடுத்தும் நோக்கில், கிளை நடவடிக்கைகளால் வழங்கப்பட்ட சிபாரிசின் பேரில் வாடகைக்கு விடப்பட்டது.<br>கோவிட் -19 வெடிப்பின் போது இரு தரப்பினராலும் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது மற்றும் நாட்டில் நிலவிய முடக்கம் மற்றும் பொருள் பற்றாக்குறை காரணமாக கட்டிட உரிமையாளர் கட்டிடத்தை ஒப்படைப்பதில் தாமதம் ஏற்பட்டது. பின்னர், வளாகத்தின் பிரிவு மதிப்பிட்டது, திட்டத்தின் செலவு காரணமாக நிர்வாகத்தால் பல முறை திருத்தப்பட்ட மேல் தள விரிவாக்கத் திட்டம் முந்தைய விலைகளை விட இரட்டிப்பாகியது.<br>எவ்வாறெனினும், இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைக்கமைய, வங்கி வலுவான நிதி ஸ்திரத்தன்மைக்கு திரும்பும் வரை அனைத்து அபிவிருத்தி திட்டங்களையும் பிற்போட்டுள்ளது. அதுவரை முகாமையாளர் கொட்டாவ கிளை எந்தவொரு அபிவிருத்திப் பணிகளும் | பயனற்ற சொத்துக்களை பயனுள்ள நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இன்றி பயனுள்ள நோக்கத்திற்காக அந்த இடத்தைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டார். எவ்வாறாயினும், உட்புறத்தினை மாற்றத்தினை விரைவாக மேற்கொள்ள வங்கி நடவடிக்கைகள் எடுத்துள்ளது. | |

**3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2024 மே மாத இறுதியில், வங்கியின் சபையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 4034 ஆகவும், உண்மையான பதவியணி 3529 ஆகவும் இருந்தது. ஆகையினால் 505 எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் காணப்பட்டன. (சிறிய, சுருக்கெழுத்தாளர், சீ.எஸ், தட்டச்சர் ஆகியோர் கோர் பேங்கிங் முறைமையினை அமுல்படுத்துவதற்காக காத்திருப்பதனால் 2024 ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படவில்லை). இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) மொத்த நிர்வாகப் பணியாளர் பதவியணி 871 இல் 231 அல்லது 27 சதவீதமான பதவியணி வெற்றிடங்களாக உள்ளன. 02 பிரதிப் பொது முகாமையாளர்கள், 15 பிரதம முகாமையாளர்கள், 21 சிரேஷ்ட முகாமையாளர்கள், 35 முகாமையாளர்கள் மற்றும் 159 உதவி முகாமையாளர்கள் என்பற்றினை இது உள்ளடக்குகின்றது. | 2024.04.01 இல அமுலுக்கு வரும் வகையில் வங்கித் தொழில் துறையில் 37 சிரேஷ்ட முகாமையாளர்கள் மற்றும் 87 முகாமையாளர்கள், மற்றும் வங்கித் தொழிலற்ற துறையில் 13 சிரேஷ்ட முகாமையாளர்கள் மற்றும் 23 முகாமையாளர்களினையும் நிரப்புவதற்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டன. உதவி முகாமையாளர்களுக்கு பதவியுயர்விற்காக எழுத்துப் பரீட்சை நடத்தப்பட்டன. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் வங்கி ஆட்சேர்ப்புக்கனை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படக் கூடாது. |
| (ii) மேற்பார்வை தரத்தின் (தரம் III-III மற்றும் IV) அங்கீகரிக்கப்பட்ட 1261 பதவியணிகளில், 2024 மே மாத இறுதியில் உள்ளபடியாக 88 எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் உள்ளன | நிர்வாக அலுவலகருக்கு (தரம் III-III) பதவியுயர்வுக்காக நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளது. | வங்கிச் செயற்பாடுகள் சுமூகமாக நடைபெறுவதற்குத் தேவையான பதவிகளில் மற்றும் தேவையான எண்ணிக்கையிலான பணியாளர்கள் இருப்பதை வங்கி உறுதி செய்ய வேண்டும். |
| (iii) இயக்குநர் சபையினால் அங்கீகரிக்கப்படாத 06 மேலதிக பதவிகளுக்கு ஊழியர்களை வங்கி நியமித்துள்ளது. விபரங்கள் | இயக்குனர் சபையின் ஒப்புதலுடன் வெற்றிடங்களினை அடிப்படையாகக் கொண்டு மாத்திரம் வங்கி ஆட்சேர்ப்பு செய்கின்றது. எதிர்கால | இயக்குனர் சபையின் ஒப்புதலுடன் வெற்றிடங்களினை அடிப்படையாகக் |

பின்வருமாறு தரப்படுகின்றது.

| பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கைகள் |
|---|---|
| பிரதம முகாமையாளர் (பி.எம்.டி) | 01 |
| முகாமையாளர் (பொறியியலாளர்/ வளாகங்கள்) | 01 |
| முகாமையாளர் (நிதி) | 02 |
| மொழிபெயர்ப்பாளர் | 01 |
| முகாமையாளர் (இணங்கல்) | 01 |
| மொத்தம் | 06 |

பதவியுயர்வுகளுக்காக பதவியணி ஏற்பாட்டினை திருத்தம் செய்யும் போது இந்த மேலதிக பதவிகள் உருவாக்கப்பட்டதே தவிர இவை மேலதிக ஆட்சேர்ப்புக்கள் அல்ல. எனவே, எதிர்கால பதவியுயர்வுகளுடன் மற்றும் பதவியணி மீளாய்வு செய்யப்படும் போதும் இந்த மேலதிக பதவியணி திருத்தம் செய்யப்படும்.

கொண்டு மாத்திரம் வங்கி ஆட்சேர்ப்பு செய்கின்றது. எதிர்கால பதவியுயர்வுகளுக்காக பதவியணி ஏற்பாட்டினை திருத்தம் செய்யும் போது இந்த மேலதிக பதவிகள் உருவாக்கப்பட்டதே தவிர இவை மேலதிக ஆட்சேர்ப்புக்கள் அல்ல. எனவே, எதிர்கால பதவியுயர்வுகளுடன் மற்றும் பதவியணி மீளாய்வு செய்யப்படும் போதும் இந்த மேலதிக பதவியணி திருத்தம் செய்யப்படும்.

(ஆ) 2021 ஒக்டோபர் 25 திகதியிட்ட சபை மனிதவள மற்றும் ஊதியக் குழுவின் (பி.எச்.ஆர்.ஆர்.சி) குறிப்பின்படி (பி.எச்.ஆர்.ஆர்.சி எண். பி.எச்.ஆர்.ஆர்.சி/2021/55) மற்றும் 2021 டிசம்பர் 09 திகதியிட்ட சபைக் குறிப்பு (சபைப் பத்திரம் எண் 419/2021), 2021 ஆம் ஆண்டின் போது வங்கியின் பல்வேறு பதிகளுக்கு ஒப்பந்த அடிப்படையின் கீழ் 24 ஊழியர்களும், நிரந்தர அடிப்படையின் கீழ் 27 ஊழியர்களும் வங்கி நியமித்தது. இந்த பணியிடங்கள் அனைத்திற்கும் திறந்த செய்தித்தாள் விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

நீண்டகால குறைகளுக்கு தீர்வாக, 2015.09.17 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழுக் புற ஒப்படைப்பு முறையில் சேவையை பரிசீலித்த அனைத்து புற ஒப்படைப்பு பணியாளர்களையும் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஒப்பந்த அடிப்படையில் 05 வருட காலப்பகுதிக்காக அவர்கள் உள்ளீர்க்கப்பட்டனர். அதன் பின்னர், 2017.03.08 திகதியிட்ட 902/2017 ஆம் இலக்க பொது முகாமையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் பூர்த்தி செய்தவர்களுக்கு பணித் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தி நிரந்தரப் பணியில் உள்ளீர்க்க கவனத்திற்கொள்ளப்பட்டது. இதற்கமைய, அலுவலக உதவியாளர்கள், தட்டச்சர்கள், தொலைபேசி தொழிற்பாட்டாளர்கள், அழைப்பு மைய தொடர்பு துணைவர்கள், ஏ/சி தொழிநுட்பவியலாளர்கள், மின்பணியியலாளர், மோட்டார்

சம்பந்தப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் போட்டி ஆட்சேர்ப்புகளுக்கு திறந்த விளம்பரங்கள் மூலம் அழைக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| | தொழிநுட்பவியலாளர்கள், வரவேற்பாளர்கள் மற்றும் சாரதிகள் ஆகிய பிரிவுகளில் புற ஒப்படைப்பு ஊழியர்களை வங்கி ஏற்கனவே உள்ளீர்த்துள்ளது.<br>மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் சில ஊழியர்கள் மட்டுமே நிரந்தரப் பணியில் உள்வாங்கப்பட வேண்டியவர்களாக உள்ளனர். ஆகையினால், அவர்கள் தொடர்பாக தீர்மானமொன்றினை வங்கி எடுக்க வேண்டியிருந்தது. அதன்படி 2021.10.25 அன்று இடம்பெற்ற பி.எச.ஆர்ஆர்.சீ இல் மேற்குறிப்பிட்ட சபையின் முன்னைய தீர்மானத்தினை தொடர கூறப்பட்ட முடிவிற்கு வந்தது. | |
| (i) 2020 யூலை 09 இல் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் (எஸ்ஓஆர்) பிரகாரம் அலுவலக உதவியாளர்களை நியமிக்கும் போது எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் நடத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டின் போது எஸ்.ஓ.ஆர்.க்கு முரணாக எழுத்துப் பரீட்சை நடத்தாமல் 03 ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். | மேலே விளக்கப்பட்டுள்ள அதே நடைமுறையினை பின்பற்றி ஒப்பந்த அடிப்படையில் குறிப்பிடப்பட்ட 03 ஊழியர்கள் அமர்த்தப்பட்டனர். 02 வருட ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்னர் அவர்கள் தொழில் சோதனையை எதிர்கொண்டதுடன் 2021.12.09 இல் இடம்பெற்ற இயக்குனர் சபையின் அங்கீகாரத்துடன் 06 மாத தகுதிகாண் காலத்துடன் நிரந்தர பதவியணிக்கு உள்ளீர்க்கப்பட்டனர். | பொருத்தமான பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தில் (SOR) குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கு இணங்குவதன் மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) 2021 ஆண்டின் போது பதினேழு (17) ஊழியர்கள் ‘‘பயிற்சியாளர் அழைப்பு நிலைய துணைவர்கள்’’ ஆக வங்கிக்குஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.<br><br>அவர்களில் குறைந்தபட்ச கல்வித் தகைமை இல்லாத இரண்டு ஊழியர்கள் “2018 ஆம் ஆண்டில் புற ஒப்படைப்பு (outsourcing) செய்யும் போது ஆட்சேர்ப்பு திட்டம் (SOR) இல்லை” என்று குறிப்பிட்டு நிரந்தர ஆளணியில் 2021 ஆம் ஆண்டின் போது உள்ளீர்க்கப்பட்டனர்.<br>எவ்வாறாயினும், ஒப்பந்த அடிப்படையில் அவர்களினை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் 2018 செப்டம்பர் 07 அன்று ஆட்சேர்ப்பு திட்டம் சபையால் | அழைப்பு மைய தொடர்பு துணைவர்கள் பதவிகளுக்கு எதிர்கால ஆட்சேர்ப்புக்களினை நெறிப்படுத்தும் நோக்கில் 2018.09.07 அன்று இயக்குனர் சபையினால் அழைப்பு மைய தொடர்பு துணைவர்களுக்கான ஆட்சேர்ப்பு திட்டம் உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. கடந்த காலங்களில் புற ஒப்படைப்பு அடிப்படையில் அழைப்பு மைய தொடர்பு துணைவர்கள்களின் சேவைகளை வங்கி பெற்றது.<br><br>இயக்குனர் சபை திட்டத்தினை அங்கீகரிப்பதற்கு முன்பு மேற்குறிப்பிட்ட இரு ஊழியர்களும் வங்கிக்கு புற ஒப்படைப்பு செய்யப்பட்டனர். எனவே, நிரந்தர பதவியணிக்குள் இரு ஊழியர்களினையும் உள்ளீர்க்கும் | வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
